Find us on facebook/tamilmirror   Follow us on tamilmirror   epaper/tamilmirror.lk

# தமிழ் Mirror

www.tamilmirror.lk

THURSDAY, JUNE 13 2024

வியாழக்கிழமை ஜூன் 13, 2024 | ஒளி: 09 கதிர் 272 | பக்கம்:07 | நகரப்பதிப்பு★ | FREE



பயணத்தை மாற்றினால்


## “மீண்டும் வரிசை யுகம்”

- ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க எச்சரிக்கை
- ஜனாதிபதித் தேர்தலில் நாட்டின் வெற்றி தோல்வியே தீர்மானிக்கப்படும்
- வெற்றிக்கான வேறு வேலைத் திட்டங்கள் இல்லை
- பயணத்தை மாற்றினால் மீண்டும் வரிசை யுகம்
- முன்னேற்ற வேலைத்திட்டம் எந்த தரப்பிடமும் இல்லை
- கடந்த கால அரசியல் தவறுகளை மீண்டும் செய்யக்கூடாது

அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் தனது தனிப்பட்ட வெற்றி, தோல்வி தீர்மானிக்கப்படாது என்றும் மாறாக நாட்டின் வெற்றி, தோல்வியே தீர்மானிக்கப்படும் என்றும் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

## இதுவரை 9 டெங்கு மரணங்கள் பதிவு



■ எஸ்.தில்லைநாதன்

நாட்டில் தற்போது நிலவும் மழையுடன் கூடிய சீரற்ற காலநிலையால் டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருவதுடன், இந்த வருடத்தின் இதுவரையான காலப்பகுதிக்குள் 25,891 டெங்கு நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர். அத்துடன், 9 டெங்கு மரணங்கள் பதிவாகியுள்ளன என தேசிய டெங்கு கட்டுப்பாட்டுப் பிரிவு தெரிவித்துள்ளது.

தொடர்ச்சி P2



## வெள்ளத்தில் உயிரிழந்த கோழிகள் விற்பனை

வெள்ளத்தில் சிக்கி உயிரிழந்த கோழிகளே இன்றைய நாட்களில் சந்தையில் விற்பனை செய்யப்படுவதாகத் தகவல்கள் கிடைத்துள்ளன என தெரிவித்துள்ள நுகர்வோர் விவகார அதிகார சபை, இந்த நாட்களில் கோழி இறைச்சியைக் கொள்வனவு செய்யும் போது அதிக கவனம் செலுத்தப்பட வேண்டுமெனக் கேட்டுக்கொண்டுள்ளார்.

தொடர்ச்சி P2

## பிபில விபத்தில் மூவர் பலி; அறுவர் காயம்

பிபில - மஹியங்கனை பிரதான வீதியின் வெகம பகுதியில் புதன்கிழமை(12) பிற்பகல் இடம்பெற்ற வாகன விபத்தில் மூவர் உயிரிழந்துள்ளனர்.

தனியார் பஸ் ஒன்றும் வேன் ஒன்றும் நேருக்கு நேர் மோதியதில் இந்த விபத்து நேர்ந்துள்ளது.

தொடர்ச்சி P2

## “என்ன சொன்னாலும் தேர்தல்கள் நடக்கும்”



யார் என்ன சொன்னாலும் உரிய நேரத்தில் எதிர்வரும் தேர்தல்கள் நடத்தப்படும் என ஜனாதிபதியின் தலைமை அதிகாரியும் சிரேஷ்ட ஆலோசகர் சாகல ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ரணில் விக்ரமசிங்க ஐக்கிய தேசியக் கட்சியைப் பிரதிநிதித்துவப்படுத்தாமல் சுயாதீன வேட்பாளராகப் போட்டியிடுவார் எனவும் கூறியுள்ளார்.

தொடர்ச்சி P2



## விடைத்தாள்களை மதிப்பிடும் ஆசிரியர்கள் ஆர்ப்பாட்டம்

■ பி.கேதீஸ்

அதிபர் ஆசிரியர்களின் சம்பள முரண்பாட்டுக்கு உடனடி தீர்வு வழங்ககோரி ஆசிரியர்களால், புதன்கிழமை(12) உணவு இடைவேளையின் போது ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.

தொடர்ச்சி P2

## அறுந்த வயரில் மின்சாரத்தை பெற்ற மாணவி பலியானார்




தையல் இயந்திரத்தின் மோட்டாருடன் இணைக்கப்பட்ட வயரை அறுத்து, பாதுகாப்பற்ற முறையில் மின் இணைப்பைப் பெற முற்பட்ட 17 வயதான பாடசாலை மாணவி ஒருவர் மின்சாரம் தாக்கி உயிரிழந்துள்ளதாக பிலியந்தலை பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

தொடர்ச்சி P2






சம்பள முரண்பாடுகள்

## நிவர்த்திக்க நிபுணர் குழு நியமனம்

அரச சேவையில் நிலவும் சம்பள முரண்பாடுகளை நிவர்த்தி செய்வதற்கு ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க நிபுணர் குழுவொன்றை நியமித்துள்ளார்.

முன்னாள் ஜனாதிபதி செயலாளர் உதய செனவிரத்னவின் தலைமையில், தேசிய வரவு- செலவுத் திட்ட திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் எஸ்.டி.ஜே. நிலுக்ஷன், முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் ஹிரன்சா களுதந்திரி, ஒருங்கிணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகம் எஸ்.

தொடர்ச்சி P2



## “பொது வேட்பாளருக்கே எங்கள் ஆதரவு இருக்கும்”

### அநுரவிடம் சித்தார்த்தன் எடுத்துரைப்பு

■ நிதர்ஷன் வினோத்

ஜனாதிபதித் தேர்தலில் பொது வேட்பாளருக்கே ஜனநாயக தமிழ்த் தேசிய கூட்டணியின் ஆதரவு இருக்கும் என தேசிய மக்கள் சக்தியின் தலைவரும் எம்.பியுமான அனுரகுமார திசாநாயக்கவிடம் கூறியதாக அவருடைய சந்திப்பின் பின்னர் பாராளுமன்ற உறுப்பினர் தர்மலிங்கம் சித்தார்த்தன் தெரிவித்தார் யாழ். கந்தரோடையில் அமைந்துள்ள அவரது வாசஸ்தலத்தில் கலந்துரையாடலின் பின்னர் கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

## மைத்திரிக்கு எதிரான தடையுத்தரவு நீடிப்பு



ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் உபதலைவர், தேசிய அமைப்பாளர் மற்றும் பொருளாளர் ஆகியோரின் செயற்பாடுகளுக்கு இடையூறு விளைவித்தமைக்காக முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிற்கு எதிராக கொழும்பு மாவட்ட நீதிமன்றம் பிறப்பித்திருந்த தடையுத்தரவை கொழும்பு மாவட்ட நீதிமன்ற பிரதான நீதவான் சந்துன் விதான புதன்கிழமை (12) நீடித்து உத்தரவிட்டுள்ளார்.

கட்சியின் சிரேஷ்ட உபதலைவர் மஹிந்த அமரவீர, தேசிய அமைப்பாளர் துமிந்த திஸாநாயக்க மற்றும் பொருளாளர் லசந்த அழகியவன்ன ஆகியோரால் தாக்கல் செய்யப்பட்டுள்ள மூன்று வழக்குகளுக்கு இணங்க இந்த தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இந்த வழக்குகளின் பிரதிவாதிகளாக முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, சரத்தி துஸ்மந்த, நிமல் சிறிபால டி சில்வா மற்றும் பைசர் முஸ்தபா ஆகியோர் குறிப்பிடப்பட்டுள்ளனர்.

தொடர்ச்சி P2

மன்னாரில் 2 ஆம் கட்ட காற்றாலை மின் உற்பத்தி

## கனிய மணல் அகழ்வு குறித்து கூட்டத்தில் வாதப்பிரதி வாதம்



■ எஸ்.ஆர்.லெம்பேட்

மன்னார் மாவட்டத்தில் 2 ஆம் கட்டமாக முன்னெடுக்கப்படவுள்ள காற்றாலை செயற்றிட்டம் மற்றும் கனிய மணல் அகழ்வுகளுக்கு எதிராக எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டது.

மன்னார் மாவட்டச் செயலகத்தில் புதன்கிழமை (12) இடம்பெற்ற மன்னார் மாவட்ட ஒருங்கிணைப்பு குழு கூட்டத்திலேயே பல்வேறு தரப்பினரால் எதிர்ப்புக்கள் முன் வைக்கப்பட்டன.

தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்

## "என்ன சொன்னாலும் தேர்தல்கள் நடக்கும்"

மேலும், ஐக்கிய தேசியக் கட்சி ஜனாதிபதிக்கு ஆதரவளிக்கும் எனவும், ஏனைய கட்சிகளிடமும் ஆதரவைப் பெறுவது தொடர்பில் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டு வெற்றியடைவதாகவும் சிரேஷ்ட ஆலோசகர் சாகல ரத்நாயக்க குறிப்பிட்டுள்ளார்.

## பிபில விபத்தில் மூவர் பலி; அறுவர் காயம்

இந்த விபத்தில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூவர் உயிரிழந்துள்ளதாகவும் மேலும் 6 பேர் காயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## நிவர்த்திக்க நிபுணர் குழு நியமனம்

ஆலோக பண்டார, நிறுவன பணிப்பாளர் நாயகம் எச்.ஏ.சந்தன குமாரசிங்க, வைத்தியர் டெரன்ஸ் காமினி டி சில்வா, துமிந்த ஹுலங்கமுவ, சந்தி எச்.தர்மரத்ன மற்றும் இசுரு திலகவர்தன ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர். ஜனாதிபதியின் மேலதிக செயலாளர் ஜீ.எல்.வெர்னன் பெரேரா குழுவின் செயலாளராக செயற்படுவார்.

அரச சேவையில் உள்ள பல்வேறு சேவைப் பிரிவுகளுக்கிடையில் நிலவும் சம்பள முரண்பாடுகள் குறித்து உரிய கவனம் செலுத்தி, 2025ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தில் நடவடிக்கைகளை மேற்கொள்ளும் வகையில் அரச சேவையின் அனைத்துத் துறைகளிலும் உள்ள சம்பளம் மற்றும் ஏனைய கொடுப்பனவுகளை மீளாய்வு செய்து திருத்தங்கள் தொடர்பான பரிந்துரைகளை நிபுணர் குழு சமர்ப்பிக்கும்.

இது தொடர்பான தமது பரிந்துரைகள் அடங்கிய அறிக்கையை 03 மாதங்களுக்குள் ஜனாதிபதிக்கு வழங்குமாறும் பணிப்புரை வழங்கப்பட்டுள்ளது.

## "பொது வேட்பாளருக்கே எங்கள் ஆதரவு இருக்கும்"

தன்னுடைய தேர்தல் பிரசாரத்தின் ஓர் அங்கமாக என்னையும் எங்களுடைய கட்சியின் அங்கத்தவர்களையும் அனுரகுமார திஸாநாயக்க சந்தித்தார். எங்களுடைய நிலைப்பாட்டை அந்த சந்திப்பில், கூறியுள்ளோம். அதிகார பரவலாக்கம் சம்பந்தமாக எதுவும் கூறாத நிலைமை உள்ளது. வடகிழக்கு பிரிப்பு சம்பந்தமான அதிருப்தியைக் கூறியிருந்தேன்.

அதேபோல, நியாயமான அதிகார பரவலாக்கல் சம்பந்தமான ஒரு பிரேரணையை முன்வைப்பாராக இருந்தால் மக்கள் நிச்சயமாக பரிசிலீப்பார்கள் . காரணம் புதிய மாற்றத்திற்கான கட்சியாகப் பார்க்கின்ற நிலை உள்ளது என்று எடுத்துரைத்தேன் என்றார்.

அத்துடன், எங்களுடைய கட்சியினை பொறுத்தவரையில் ஜனநாயக தமிழ்த் தேசிய கூட்டணியாக ஐந்து கட்சிகள் சார்பாகவும் ஒரு பொது வேட்பாளர் நிறுத்தப்படுகின்ற பொழுது அதனை ஆதரிப்பதற்கான நிலைப்பாட்டினை எடுத்துள்ளோம்.

> **எங்களுடைய கட்சியினை பொறுத்தவரையில் ஜனநாயக தமிழ்த் தேசிய கூட்டணியாக ஐந்து கட்சிகள் சார்பாகவும் ஒரு பொது வேட்பாளர் நிறுத்தப்படுகின்ற பொழுது அதனை ஆதரிப்பதற்கான நிலைப்பாட்டினை எடுத்துள்ளோம்**

ஆகவே, ஜனாதிபதி தேர்தல் என வருகின்ற பொழுது நாம் தமிழ் பொது வேட்பாளருடனே நிற்போம் என தெளிவாக எடுத்துக் கூறியுள்ளோம் என அவர் மேலும் தெரிவித்தார்.



## விடைத்தாள்களை மதிப்பிடும் ஆசிரியர்கள் ஆர்ப்பாட்டம்

கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சைக்கான விடைத்தாள்களை மதிப்பீடு செய்யும் ஆசிரியர்களால் இந்த ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.

விடைத்தாள் மதிப்பிடும் பணிகளில் ஈட்டுப்பட்டிருக்கும் ஆசிரியர்கள் தமது உணவு இடைவேளையின்போது நுவரெலியா ஆவாஎலிய மகளிர் உயர்நிலை பாடசாலை முன்பாக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டமை குறிப்பிடத்தக்கது.

# "மீண்டும் வரிசை யுகம்"

அரசாங்கத்தின் வேலைத் திட்டத்தின் கீழ், நாட்டை முன்னோக்கிக் கொண்டு செல்லமுடியும் என்ற திருப்தி மக்களுக்கு இருக்குமாயின் அந்த வேலைத்திட்டத்துடன் முன்னேறிச் செல்ல முடியும் என்றும், அவ்வாறு இல்லாவிட்டால், நாட்டு மக்கள் மீண்டும் மருந்து, உரம், எரிவாயு, எரிபொருள் வரிசைகளில் நிற்க நேரிடும் என்றும் ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

பத்தரமுல்லை வோடர்ஸ் எட்ஜ் ஹோட்டலில் செவ்வாய்க்கிழமை(11) நடைபெற்ற பொருளாதார மறுசீரமைப்புக்கான பாராளுமன்ற துறைசார் மேற்பார்வை குழுவில் பங்கேற்கும் இளைஞர், யுவதிகளுடனான கலந்துரையாடலின் போதே ஜனாதிபதி இதனைத் தெரிவித்தார்.

இன்று அரசியல் மேடைகளில் பல்வேறுபட்ட வாக்குறுதிகளை வழங்கும் குழுவினரிடம் நாட்டின் முன்னேற்றத்திற்கான எந்தவொரு நடைமுறைச் சாத்தியமான வேலைத் திட்டமும் இல்லையென சுட்டிக்காட்டிய ஜனாதிபதி, தேர்தல்களின் போது நபர்களைப் பார்த்து தீர்மானம் எடுக்கும் கடந்த கால அரசியல் தவறுகளை மீண்டும் செய்ய வேண்டாமெனவும் கேட்டுக்கொண்டார்.

நாட்டின் பொருளாதார மறுசீரமைப்புக்காக சமர்ப்பிக்கப்பட்டிருக்கும் சட்டமூலத்தை நிறைவேற்ற ஆதரவளிக்குமாறு கேட்டுக்கொண்ட ஜனாதிபதி, அதற்கு மாறாக நாட்டின் முன்னேற்றத்துக்கான வேறு திட்டங்களை வைத்துள்ளவர்கள் அதனை நாட்டுக்கு அறிவிக்க வேண்டும் என்றும் கூறினார்.

"இன்று துறைசார் மேற்பார்வை குழு அங்கத்தவர்களாகவே இங்கு வந்துள்ளீர்கள். அவ்வாறு செய்வதற்கான ஆலோசனையை முன்னாள் சபாநாயகர் கரு ஜயசூரியவே வழங்கியிருந்தார். இதனால் இளைஞர்,யுவதிகள் நாட்டின் முன்னேற்றத்துக்கான தங்களது யோசனைகளை வழங்க முடியும். அந்த யோசனைகளை நாமும் செவிமடுப்போம்.

நாட்டின் பொருளாதார ரீதியான வங்குரோத்து நிலையைப் பற்றி பலரும் பேசுகிறார்கள். அதனை நான் ஏற்றுக்கொள்ளப்போவதில்லை. இந்த நாடு பொருளாதார ரீதியாக மாத்திரமன்றி, அரசியல் ரீதியாகவும் வங்குரோத்தடைந்துள்ளது என்பதே உண்மையாகும். இவை இரண்டும் பிரித்துப் பார்க்க முடியாத பிரச்சினைகளாகும்.

நாட்டில் சரியான பொருளாதார முறைமை இன்மையே அதற்குக் காரணமாகும். நாட்டில் இதுவரையிலும் இறக்குமதியை மையப்படுத்திய பொருளாதாரமே காணப்பட்டது. தேவையான அனைத்துப் பொருட்களையும் இறக்குமதி செய்தோம். அதற்கு செலுத்தத் தேவையான பணமும் எம்மிடம் இருக்கவில்லை. அதற்கு மத்தியில் யுத்தத்துக்கும் செலவிட வேண்டிய நிலைமை ஏற்பட்டது. ஆனால் யுத்தத்திற்குப் பின்னர் துரிதமான பொருளாதார வளர்ச்சியை எட்டிப் பிடிப்பதற்கான வாய்ப்பு நாட்டுக்குக் கிடைத்திருந்தது. யுத்தம் நிறைவடைந்து 15 வருடங்கள் ஆன பின்பும் நாம் அந்த முன்னேற்றத்தை அடைய முடியவில்லை. நாம் பழைய முறைகளையே பின்பற்றினோம். பணம் இல்லாத வேளையில் கடன் பெற்றுக்கொண்டோம். அதனை மீளச் செலுத்த முடியாமல் போனது.

இவ்வாறான நேரத்தில் நாட்டு மக்களுக்கு உண்மை நிலையைச் சொல்ல எவரும் முன்வரவில்லை. இருப்பினும் நாட்டில் பொருளாதார மாற்றம் ஒன்று அவசியம் என்பதை நான் வலியுறுத்தினேன். அதற்கான பணிகளைச் செய்யும் போது நாட்டை விற்கப் போவதாகப் பிரசாரம் செய்யப்பட்டது. இறுதியில் நாம் வங்குரோத்து நிலையை அடைந்தோம்.

நாட்டின் வருமான தேவையைக் கருத்தில் கொண்டு 2015ஆம் ஆண்டு நான் பிரதமராகப் பதவி வகித்த காலத்தில் வரி அதிகரிப்புச் செய்ய வேண்டியிருந்தது. 2019ஆம் ஆண்டில் முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்‌ஷ வரிகளைக் குறைத்தார். அதனால் நாட்டின் வருமானம் குறைந்தது.

உலகின் வேறு எந்தவொரு நாட்டிலும் ஒரேயொரு ஆசனத்தை வென்று பாராளுமன்றத்திற்குத் தெரிவானவர்கள் பிரதமர் அல்லது ஜனாதிபதியாகப் பதவியேற்றதில்லை. ஆனால் இலங்கையில் அது நடந்தது. நாட்டின் அரசியல் வங்குரோத்து நிலையே அதற்குக் காரணமாகும். நாட்டை பொறுப்பேற்றுக்கொண்டு பிரச்சினைகளைத் தீர்க்க எவரும் முன்வரவில்லை. அதனால் நான் ஜனாதிபதி பதவியை ஏற்றுக்கொண்டேன்.

அதன் பின்னர் நாட்டின் இளைஞர் யுவதிகளிடமும் இந்த பொறுப்புக்களை வழங்கி அவர்களுக்கு இதுகுறித்த தெளிவூட்டல்களை வழங்க நாம் தீர்மானித்தோம். அதன்படியே இந்த வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டது. தற்போது நாட்டின் முன்னேற்றத்துக்கான வேலைத்திட்டம் ஒன்று உள்ளது. அதனைப் பொறுப்பேற்று நாட்டை முன்னேற்றிச் செல்வதற்காக இளைஞர்கள் தயாராக வேண்டும்.

இன்று அரசியல் வாதிகள் பலதரப்பட்ட வாக்குறுதிகளை வழங்குகின்றனர். அவர்களில் எவரும் நாட்டின் முன்னேற்றத்துக்கான கொள்கைகளை முன்மொழியவில்லை. எதிர்க்கட்சித் தலைவரும் அநுர குமார திசாநாயக்கவும் எந்த இடத்தில் விவாதம் செய்வது என்பது குறித்தே ஒரு மாத காலமாக விவாதித்தனர். இறுதியாக ஒரு விவாதத்திற்கு வரவும் இல்லை. இவர்களில் ஒருவரிடத்திலும் நாட்டின் முன்னேற்றத்திற்கான கொள்கைகள் இல்லை.

அதனால் அரசாங்கம் கொண்டு செல்லும் வேலைத்திட்டத்திற்கு மாறான வேறு முறைமைகள் இருக்குமாயின் அதனை அவர்கள் கூற வேண்டும். எவரும் அவ்வாறான திட்டத்தை முன்வைத்திருப்பதாகத் தெரியவில்லை. உங்கள் எதிர்காலத்தைப் பொறுப்பேற்க அவர்கள் தயாராக இல்லாத பட்சத்தில் உங்களின் எதிர்கால முன்னேற்றத்தை நீங்களே தீர்மானித்துக்கொள்ள வேண்டும். அதற்கான வேலைத்திட்டம் மிக அவசியமானது. உங்கள் அறிவு மேம்பாட்டிற்காக ஏனைய அதிகாரிகள் மற்றும் தனியார்த்துறை பிரதிநிதிகளைச் சந்திக்கவும் வாய்ப்பளிக்கப்பட வேண்டும். புதிய திட்டங்களை முன்னோக்கிக் கொண்டு செல்ல வேண்டும். பழைய முறைமைகளில் சிக்கிக் கிடப்பதை விடுத்து துரித அபிவிருத்தியை நோக்கி நகர்வதற்கு அனைவருக்கும் அழைப்பு விடுக்கிறேன்." என்று ஜனாதிபதி தெரிவித்தார்.

## கனிய மணல் அகழ்வு குறித்து...

எனினும் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவினால் எவ்வித அனுமதியும் வழங்கப்படாமல் முன்னெடுக்கப்படும் நடவடிக்கைகளுக்கு எதிராக மக்களே நடவடிக்கை எடுக்க வேண்டும் மன்னார் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு தெரிவித்துள்ளது.

மன்னார் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் மாவட்ட அரசாங்க அதிபர் க. கனகேஸ்வரனின் நெறிப்படுத்தலில் அபிவிருத்தி குழுவின் தலைவரான இராஜாங்க அமைச்சர் காதர் மஸ்தான் தலைமையில் இடம் பெற்றது.

இதன் போது பாராளுமன்ற உறுப்பினர்களான செல்வம் அடைக்கலநாதன்,சாள்ஸ் நிர்மலநாதன்,கே. திலீபன் ஆகியோர் கலந்து கொண்டிருந்தனர்.

குறிப்பாக மன்னார் தீவு பகுதியில் 2வது கட்டமாக முன்னெடுக்கப்படவுள்ள காற்றாலை மின் உற்பத்தி மற்றும் கனிய மணல் அகழ்வு குறித்துக் கலந்துரையாட பட்ட போது பல்வேறு தரப்பினரால் எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டது. மன்னார் மாவட்ட பிரஜைகள் குழு மீனவ அமைப்புகள் மற்றும் பொது அமைப்புக்களின் ஒன்றியம் ஆகியவை எதிர்ப்பை தெரிவித்தன.

மன்னார் தீவு பகுதிக்குள் கனிய மணல் அகழ்வு அல்லது ஆராய்ச்சி நடவடிக்கைகள் இனி இடம் பெற கூடாது என பல முறை தெரிவிக்கப்பட்ட போதும்,குறித்த அகழ்வு தொடர்பாக அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில் கதைக்கப்பட்டமைக்கு எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டது.

மேலும், கடந்த அபிவிருத்தி குழுக் கூட்டத்தின் போது காற்றாலை மின் செயற்றிட்டம் தொடர்பாக ஜனாதிபதியிடம் பேசுவதாகப் பாராளுமன்ற உறுப்பினர் தெரிவித்த போதும் இதுவரை எவ்வித முயற்சிகளும் முன்னெடுக்கப்பட வில்லை என விசனம் தெரிவித்துள்ளனர்.

மன்னார் தீவில் கணிய மணல் அகழ்வு முன்னெடுக்கப்பட கூடாது என்பதே அனைவரினதும் கோரிக்கை. எனினும் கணிய மணல் அகழ்வை முன்னெடுக்கும் நிறுவனத்தை அழைத்து கலந்துரையாடியமை யை ஏற்றுக்கொள்ள முடியாது என பாராளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன் தெரிவித்தார்.



## இதுவரை 9 டெங்கு மரணங்கள் பதிவு

இந்த வருடத்தில் ஜூன் மாதத்தின் முதல் 11 நாட்களில் மாத்திரம் 971 டெங்கு நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

அதிகளவான டெங்கு நோயாளர்கள் கொழும்பு மாவட்டத்தில் அடையாளம் காணப்பட்டுள்ளதுடன் அவர்களின் எண்ணிக்கை 5,624 ஆகும்.

மேலும், யாழ்ப்பாணம் மாவட்டத்தில் 3,930 டெங்கு நோயாளர்களும் கம்பஹாவில் 2,487 டெங்கு நோயாளர்களும் கண்டியில் 1,986 டெங்கு நோயாளர்களும் இரத்தினபுரியில் 1,441 டெங்கு நோயாளர்களும் களுத்துறையில் 1,372 டெங்கு நோயாளர்களும் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.



## வெள்ளத்தில் உயிரிழந்த கோழிகள் விற்பனை

வெள்ளத்தில் உயிரிழந்த கோழிகளை இறைச்சியாக்கி, உட்கொள்வது உடலுக்குத் தீங்கு விளைவிப்பதால், அதில் அதிக கவனம் செலுத்த வேண்டும் என சஞ்சய இரசிங்க கூறுகிறார்.

" வெள்ளத்தில் சிக்கி இறந்த கோழிகளைச் சுத்தப்படுத்தி, பொதி செய்து விற்பனை செய்யும் கும்பல் குறித்து எங்களுக்குத் தகவல் கிடைத்தது. கடந்த சில நாட்களாக இது குறித்து விழிப்புடன் இருந்தோம். சுற்றிவளைப்புகளை நடத்தினோம். இது நாடளாவிய ரீதியில் நடக்கிறது. நீங்களும் கோழி இறைச்சிகளைக் கொள்வனவு செய்யும்போது கவனமாக இருக்கக் கோருகிறோம். குறிப்பாக இறைச்சிக்காக எடுக்கப்படும் கோழி இறைச்சி வெள்ளை நிறமாக இருக்கும். ஆனால் இவை சிவப்பு நிறத்தினை ஒத்தவையாக இருக்கும். இவை எவ்வளவு சூடாக்கினாலும் இவற்றில் உள்ள கிருமிகள் அழியாது " என்றார்.

"களனி ஆற்றைச் சுற்றித்தான் பல கடைகள் உள்ளன. வெள்ளத்தால் பாதிக்கப்படும் இடங்கள் இருந்தால், மிகக் குறைந்த விலையில் இணையங்களில் பொருட்களைக் கொண்டுவருவதாக யூடியூப், பேஸ்புக்கில் விளம்பரங்கள் வருகின்றன. இதற்கு மயங்காதீர்கள். இவை நுகர்வுக்குத் தகுதியற்றவை. தயவு செய்து அவ்வாறு ஏதும் அறிந்திருந்தால் 1977 எனும் தொலைபேசிக்கு அறியத்தரவும்" என்றும் கேட்டுக்கொண்டார்.

## அறுந்த வயரில் மின்சாரத்தை பெற்ற மாணவி பலியானார்

பிலியந்தலை தும்போவிலவில் வசிக்கும் மாணவியே இவ்வாறு உயிரிழந்துள்ளார். இவர், 2025 ஆம் ஆண்டு கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றவிருந்தார்.

உயிரிழந்த மாணவியின் பிரேதப் பரிசோதனை களுபோவில போதனா வைத்தியசாலையில் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

## மைத்திரிக்கு எதிரான தடையுத்தரவு நீடிப்பு

கட்சியின் பொருளாளர், தேசிய அமைப்பாளர் மற்றும் சிரேஷ்ட உபதலைவர் பதவிகளை நீக்கும் தீர்மானத்தை ரத்து செய்யுமாறு கோரி வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

மைத்திரிபால சிறிசேன உள்ளிட்ட தரப்பினர் கடந்த மார்ச் மாதம் 30ஆம் திகதி இடம்பெற்ற சட்டவிரோத செயற்குழு கூட்டத்தில் இந்த நியமனத்தை வழங்கியிருந்தனர்.

இந்த தடை உத்தரவுக்கு எதிரான ஆட்சேபனைகளைத் தாக்கல் செய்ய அவகாசம் வழங்குமாறு பிரதிவாதிகள் முன்வைத்த வாதங்களைப் பரிசீலித்த பின்னர், குறித்த தடை உத்தரவுகளை ஜூலை 30 ஆம் திகதி வரை நீட்டித்து உத்தரவிட்டு விசாரணையை அன்றைய தினத்திற்கு ஒத்திவைக்கப் பட்டது.





# சஜித்தை சந்தித்த கூட்டமைப்பு

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பிரதிநிதிகள் விடுத்த விசேட அழைப்பின் பேரில், எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச அவர்களுக்கும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பிரதிநிதிகளுக்கும் இடையிலான விசேட சந்திப்பொன்று யாழ்ப்பாணத்திலுள்ள இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி அலுவலகத்தில் நேற்று (10) மாலை இடம்பெற்றது.

யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி ஆகிய மாவட்டங்களிலுள்ள பல பாடசாலைகளுக்கு ஸ்மார்ட் வகுப்பறைகள் மற்றும் பாடசாலை பேருந்து வழங்கும் வேலைத்திட்டங்களுக்காக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச இந்நாட்களில் யாழ். மாவட்டத்திற்கு விஜயம் மேற்கொண்டிருக்கும் வேளையிலேயே இச்சந்திப்பு இடம்பெற்றது.

இங்கு இலங்கையின் தற்போதைய சமூக, பொருளாதார, அரசியல் நிலைமைகள் தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பிரதிநிதிகளுக்கும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசவுக்கும் இடையில் நீண்டநேரம் கருத்துப் பரிமாற்றம் இடம்பெற்றது.



# கேரள கஞ்சா மீட்பு; சந்தேக நபருக்கு வலை

■ பு.கஜிந்தன், நிதர்ஷன் விநோத்

யாழ்ப்பாணம் குருநகர் பகுதியிலிருந்து 22 கிலோ கிராம் கேரள கஞ்சா தொகையை செவ்வாய்க்கிழமை (11) கைப்பற்றப்பட்டதாக யாழ்ப்பாணம் பொலிஸார் தெரிவித்துள்ளனர் .

பொலிஸாருக்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் குருநகர் பகுதியில் மேற்கொள்ளப்பட்ட விசேட சுற்றிவளைப்பின் போதே 10 பொதிகளிலிருந்து 22 கிலோ கிராம் கேரள கஞ்சா கைப்பற்றப்பட்டது.

கைப்பற்றப்பட்ட கஞ்சாவை யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றத்தில் முற்படுத்தவுள்ளதாகவும் சந்தேக நபரைக் கைது செய்ய நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

# “ஒலுவில் துறைமுகம் புனரமைக்கப்படும்”

ஒலுவில் துறைமுகம் சார்ந்த வளங்கள் பாதுகாக்கப்பட்டு அதனைப் புனரமைத்து, நாட்டின் முன்னேற்றத்திற்குப் பயன்படுத்தப்படும் என கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

கடந்த காலத்தில் நிலவிய வரிசை யுகத்தை முடிவுக்குக் கொண்டு வந்து மக்களின் வாழ்க்கையை வழமைக்குக் கொண்டு வருவதற்கு ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க அர்ப்பணிப்புடன் செயற்பட்டதாகவும், அதனால் எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் அவருக்கு ஆதரவளித்து அவருடன் இணைந்து செயற்படவுள்ளதாகவும் அமைச்சர் குறிப்பிட்டார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் செவ்வாய்க்கிழமை (11) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா இதனைத் தெரிவித்தார்.

இங்கு மேலும் கருத்துத் தெரிவித்த கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா,

“ஒலுவில் துறைமுகத்தை புனரமைத்து மீள இயக்குவது தொடர்பான கலந்துரையாடல் இன்று இடம்பெற்றது. துறைமுக அதிகார சபையின் அதிகாரிகள், கடற்படையினர், துறைசார் நிபுணர்கள், ஒலுவில் பகுதி புத்திஜீவிகள், மற்றும் பொதுமக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அமைப்புகள் உள்ளிட்ட பலர் இதில் கலந்துகொண்டனர்.

அந்தப் பிரதேச மக்களின் நலன்களைப் பேணும் வகையிலும் அங்குள்ள வளங்களைப் பாதுகாத்து அபிவிருத்தி செய்கின்ற வகையிலும் துறைமுகத்தை மேம்படுத்தும் முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றோம். குறித்த துறைமுகத்தை நாட்டின் முன்னேற்றத்திற்கு எவ்வாறு பயன்படுத்துவது என்பதைக் கண்டறிவதே இந்தக் கலந்துரையாடலின் நோக்கமாகும். அப்பணிகளை நிறைவு செய்து விரைவாக எமது இலக்கை அடைய வேண்டும் என்றார்.



# “குடிநீரை குடித்தால் பேதி என்பது பீதி”

தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்புச் சபையினால் விநியோகிக்கப்படும் நீரைக் குடித்து கொழும்பை அண்மித்த பகுதிகளில் உள்ள மக்கள் வயிற்றுப்போக்கு மற்றும் வாந்தியால் அவதிப்படுவதாக வெளியான செய்திகள் முற்றிலும் பொய்யானவை என தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்புச் சபை தெரிவித்துள்ளது. முறையான சுத்திகரிப்பு நடவடிக்கையின் பின்னரே மக்களுக்குக் குடிநீர் வழங்கப்படுவதாக அதன் உதவி பொது மேலாளர் ஏ.பி.ஆர்.ஜே. விஜேசிங்க குறிப்பிட்டார்.

“சுத்திகரிப்புக்குப் பின்னர் தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகால் அமைப்புக்கு வழங்கப்படும் தண்ணீர் தொடர்ந்து ஆய்வக சோதனைகளுக்கு உட்படுத்தப்படுகின்றது. பரிசோதனை முடிவுகளின்படி நுண்ணுயிரியல் சோதனைகள் மற்றும் அனைத்து இரசாயன சோதனைகள் மேற்கொள்ளப்படுகின்றன. இலங்கை தரநிலையில், எந்த விதமான நோய்க்கிருமிகளும் இல்லை எனவும், வெள்ளத்தில் எந்த தண்ணீர் வந்தாலும் அதற்குரிய துப்புரவு பணிகளைச் செய்து தரமான குடிநீரைத் தேசிய நீர் வழங்கல் வடிகால் வாரியம் வழங்கி வருகிறது எனவே வீண் அச்சத்தைத் தவிர்க்குமாறும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.





# 38ஆவது ஆண்டு நினைவு தினம்

சேருவில படுகொலையின் 38வது ஆண்டு நினைவு தினத்தையொட்டி வெருகல் – பூமரத்தடிச்சேனை பகுதியில் புதன்கிழமை (12) அன்று நினைவு தினம் அனுஷ்டிக்கப்பட்டது.இதனை பிரதேச மக்கள் ஏற்பாடு செய்திருந்தனர்.
இதன்போது உயிரிழந்தவர்களுக்கு மலர் தூவி ,விளக்கேற்றி அஞ்சலி செலுத்தப்பட்டது.



# விவசாய அமைச்சின் செயலாளர் நியமனம்

கிழக்கு மாகாண விவசாய, கால்நடை உற்பத்தி மற்றும் அபிவிருத்தி, கூட்டுறவு அபிவிருத்தி, காணி நிர்வாகம், மீன்பிடி, உணவு வழங்கலும் விநியோகத்திற்குமான அமைச்சின் செயலாளராக சம்மாந்துறை பிரதேசத்தைச் சேர்ந்த எம்.எம்.நசீர் அமைச்சின் கடமைகளை திங்கட்கிழமை (10) பொறுப்பேற்றுக்கொண்டார்.

இலங்கை நிருவாக சேவையின் விசேட தரத்தையுடைய இவர், கிழக்கு மாகாண பிரதிப் பிரதம செயலாளராக (நிர்வாகம்) கடமையாற்றி வந்த நிலையில் கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமானினால் இவர் நியமிக்கப்பட்டார்.

# ஆலயக்கதவு திறந்த தினத்தில் ஆலயத் தலைவர் மரணம்

■ வி.ரி.சகாதேவராஜா

ஆலயக்கதவு திறந்த அதேதினம் ஆலயத் தலைவர் மரணமான சம்பவம் சம்மாந்துறை கோரக்கர் கிராமத்தில் செவ்வாய்க்கிழமை(11) இரவு இடம் பெற்றுள்ளது.

சம்மாந்துறை, கோரக்கர்கிராம அகோரமாரியம்மன் ஆலயம் மற்றும் கோரக்கர் பிள்ளையார் ஆலய பரிபாலன சபையின் தலைவரான 66 வயதுடைய ம.பாலசுப்பிரமணியம் என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

வருடாந்த தீமிதிப்பு திருவிழா உற்சவத்திற்காக ஆலயபூசகர் மு.ஜெகநாதன் தலைமையில் கடல் நீர் எடுத்து வந்து ஆலயக் கதவு செவ்வாய்க்கிழமை(11) காலை திறக்கப்பட்டுள்ளதுடன் அன்றிரவு 7 மணியளவில் ஆலய பரிபாலன சபையின் தலைவர் பாலசுப்பிரமணியம் இறைபதமடைந்தார்.

கடந்த 25 வருடகாலமாக இறைபணி செய்த அவரின் மரணச் செய்தி பலரது மனங்களையும் நெகிழச்செய்தது. மேலும். அவரது பூதவுடல் கோரக்கர் மயானத்தில் புதன்கிழமை (12) அன்று நல்லடக்கம் செய்யப்பட்டது.



# ஈரநில பூங்கா முதலாவது மாநாடு

சர்வதேச ஈரநில பூங்கா சங்கத்தின் அவுஸ்திரேலியா, நியூசிலாந்து மற்றும் ஆசிய நாடுகளின் முதலாவது மாநாடு ஜூன் 17 முதல் 21 வரை பத்தரமுல்ல தியசரு பூங்காவில் நடைபெறவுள்ளது. நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சின் கீழ் உள்ள காணி அபிவிருத்தி கூட்டுத்தாபனம் இதை ஏற்பாடு செய்துள்ளது.

உலகெங்கிலும் உள்ள 15 நாடுகளில் உள்ள 70க்கும் மேற்பட்ட ஈரநிலப் பூங்காக்களிலிருந்து கிட்டத்தட்ட 100 பிரதிநிதிகள் இதில் பங்கேற்கின்றனர்.

இலங்கை, கொரியா, மங்கோலியா, பிலிப்பைன்ஸ், ஜோர்டான், மியன்மார், நியூசிலாந்து, நேபாளம், ஜப்பான், அவுஸ்திரேலியா, சீனா, இந்தியா, பாகிஸ்தான், தாய்வான், இங்கிலாந்து ஆகிய 15 நாடுகள் மாநாட்டில் பங்கேற்கின்றன.

“சூழலுக்கு உகந்த சுற்றுலாவுக்கான ஈரநிலங்கள் மற்றும் ஈரநில மையங்கள்” என்பது இந்த ஆண்டு மாநாட்டின் கருப்பொருளாகும். ஈரநிலங்களின் பாதுகாப்பு மற்றும் நிலையான நிர்வாகத்தில் ஒத்துழைப்பை ஊக்குவிப்பதும் மேம்படுத்துவதும் மாநாட்டின் நோக்கமாகும்.

# தண்ணீர் தொட்டியில் மூழ்கி குழந்தை மரணம்



பொத்துவில் பிரதேசத்தில் உள்ள வீடொன்றிலிருந்த இரட்டைக் குழந்தைகளில் ஒரு குழந்தை, தண்ணீரில் மூழ்கி உயிரிழந்துள்ளதாக பொத்துவில் பொலிஸார் தெரிவித்துள்ளனர் .

பொத்துவில் 07ஆம் பிரிவு , சென்ட்ரல் வீதியைச் சேர்ந்த மொஹமட் ரஹீம் உவைஸ் பாத்திமா மிஹியுரி என்ற சிறுமியே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

குழந்தைகளின் தாய் , சிறுமியின் உடலைக் கழுவுவதற்காக வீட்டின் பின்புறமுள்ள குழாயின் அருகில் உள்ள தண்ணீர் நிரம்பிய தொட்டியில் குழந்தையை நிற்க வைத்து சவக்கார கட்டியை எடுத்துக்கொண்டு வர சென்றுள்ளார். அப்போது மற்றைய குழந்தை சமையலறையில் நின்று அழுது கொண்டிருந்துள்ளது.

பின்னர், சவக்காரத்தை எடுத்துக்கொண்டு வெளியிலிருந்த குழந்தையின் அருகில் வந்தபோது, குறித்த குழந்தை தலைகீழாக விழுந்து, தலை தண்ணீரில் மூழ்கிய நிலையில் காணப்பட்டுள்ளதாகக் குழந்தையின் தாய், பொலிஸாரிடம் தெரிவித்துள்ளார் .

பிரதேச மக்களின் உதவியுடன் குழந்தையை பொத்துவில் வைத்தியசாலையில் அனுமதித்துள்ளதுடன் அப்போதும் குழந்தை உயிரிழந்துள்ளதாக வைத்தியர்கள் தெரிவித்துள்ளனர்.

மேலும், இந்த இரட்டையர்களின் தந்தை வெளிநாட்டில் பணியாற்றி வருவதாகவும் இச்சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

# தாமரை பறிக்க சென்ற மாணவன் கிணற்றில் விழுந்து பலி

அத்திமலை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட தோரா அத்துப்பிட்டிய ஏரியில் தாமரை பூ பறிக்க சென்ற பாடசாலை மாணவன் நீரில் மூழ்கி செவ்வாய்க்கிழமை (11) உயிரிழந்துள்ளார்.

அத்திமலை மகா வித்தியாலயத்தில் கல்வி கற்கும், கொவிப்பொல வீதியை சேர்ந்த மதிஷ தேனுவன் (வயது 9) என்ற சிறுவனே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்த சிறுவன் பாடசாலை முடிந்து, தனது நண்பர்கள் மூவருடன் தாமரை பறிப்பதற்காக குறித்த ஏரிக்கு சென்றுள்ளார். அப்போது வறட்சி காலத்தில் தண்ணீர் எடுப்பதற்காக ஏரியின் நடுவே வெட்டப்பட்ட கிணற்றில் தவறி விழுந்து நீரில் மூழ்கியுள்ளார். சிறுவனுடன் வந்த நண்பர்கள் இச்சம்பவம் தொடர்பில் எவருக்கும் தெரிவிக்காத நிலையில், மாலை 5.45 மணியாகியும் சிறுவன் வீட்டிற்கு வராததால் சிறுவனின் தந்தை சிறுவனை தேடியுள்ளார்.

அப்போது சிறுவன் ஏரியை நோக்கி சென்றதை கண்டதாக அக்கம் பக்கத்தினர் தெரிவித்ததையடுத்து, அங்கு சென்று பார்த்த போது, சிறுவன் ஏரியின் நடுவில் உள்ள கிணற்றிலிருந்து சடலமாக மீட்கப்பட்டுள்ளார். அவரை பிரதேச வைத்தியசாலைக்குக் கொண்டு சென்ற போதிலும், சிறுவன் உயிரிழந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது .

மேலும்,இச்சம்பவம் தொடர்பிலான மேலதிக விசாரணைகளை அத்திமலை பொலிஸார் மேற்கொண்டுவருகின்றனர்

# ஊடக சுதந்திரத்துக்காக வழங்கப்பட்ட வரலாற்று தீர்ப்பு

இரத்தினபுரியின் முன்னாள் ஆளுநர் மாலானி லொக்குபோத்தகம மற்றும் இரத்தினபுரி பொலிஸ் நிலையத்தின் முன்னாள் கட்டளைத் தளபதி ஆகியோர் ஊடகவியலாளரிடம் பணிந்து, உயர் நீதிமன்றத்தில் ஊடகவியலாளரிடம் மன்னிப்புக் கோரியுள்ளார்.

ஊடகவியலாளர் சரத் விமலரத்னவுக்கு எதிராக மேலும் நடவடிக்கை எடுக்க மாட்டோம் எனவும் அவருக்கு எதிராக நீதவான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கை வாபஸ் பெறுவதாகவும் உயர் நீதிமன்றத்தில் பிரதிவாதிகள் உறுதியளித்ததையடுத்து இருதரப்பு இணக்கப்பாட்டின் அடிப்படையிலேயே இந்த வழக்கு முடிவுக்கு வந்துள்ளது

ஊடகவியலாளர் சரத் விமலரத்னவினால் தனது அடிப்படை உரிமை மீறப்பட்டதாகத் தாக்கல் செய்யப்பட்ட மனு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போது முர்து பெர்னாண்டோ மற்றும் மஹிந்த சமயவர்தன ஆகிய நீதியரசர்களைக் கொண்ட உயர் நீதிமன்ற அமர்வு வழங்கிய தீர்ப்பு ஒரு வரலாற்றுத் தீர்ப்பாகும்.

'கடவுள் ஒருவரிடம் கோபப்பட்டால், அவரை மூன்றாம் உலக நாட்டில் பத்திரிக்கையாளனாக்கி தண்டனை கொடுப்பார்' என்பது ஊடகங்கள் தொடர்பான பிரபலமான பழமொழி. இங்கு மூன்றாம் உலகம் என்றால் வளர்ச்சியடையாத நாடு என்று பொருள். உடல் ரீதியாகவும் சமூக ரீதியாகவும் வளர்ச்சியடையாதவர்கள் என்று பொருள். அத்தகைய சமூகத்தில் ஒரு பத்திரிகையாளராக இருப்பது மிகவும் கடினமான மற்றும் சவாலான அனுபவம்.

ரிச்சர்ட் டி சொய்சா ஓர் ஊடகவியலாளர். நள்ளிரவில் பாதுகாப்புப் படையினர் அவரது வீட்டிற்குள் புகுந்து அவரை அழைத்துச் சென்றனர். அவரது சடலம் எகொட உயன கடற்கரையில் கண்டெடுக்கப்பட்டுள்ளது. சண்டே லீடர் பத்திரிகையின் பிரதம ஆசிரியர் லசந்த விக்ரமதுங்க பட்டப்பகலில் கொல்லப்பட்டார். வரலாறு நெடுகிலும் சில ஊடகவியலாளர்கள் கடத்தப்பட்டு சித்திரவதை செய்யப்பட்ட சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன.

வடக்கு, கிழக்கைப் பொறுத்தவரையில், பல ஊடகவியலாளர்கள் அப்பட்டமாகவே படுகொலைச் செய்யப்பட்டனர். கடுமையான அச்சுறுத்தல்களால் நாட்டைவிட்டுத் தப்பியோடி வெளிநாடுகளில் குடியேறிவிட்டனர். அந்தளவுக்கு ஊடகவியலாளர்கள் நெருக்குவாரங்களுக்கு முகங்கொடுத்தனர்.

பத்திரிக்கையாளரின் பொறுப்பை அங்கீகரிக்காத மக்களின் பதில் அப்படி. கலாசார ரீதியாக நமது நாடு மிகவும் கீழ்நிலையில் இருப்பதால், நமது நாட்டை வளர்ச்சியடையாத நாடாகவே கருத வேண்டியுள்ளது.

ஊடகவியலாளர் சரத் விமலரத்ன தொடர்பில் உயர் நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பு மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது, ஏனெனில் இந்த தீர்ப்பு ஊடகவியலாளர்களின் பங்கை வேறு கோணத்தில் பார்க்க ஒரு தூண்டுதலை உருவாக்குகிறது. இரத்தினபுரி ஆளுநர் நாயகத்தின் அலுவலகத்திற்குள் தொப்பி அணிந்து பிரவேசித்தார் என்ற குற்றச்சாட்டின் அடிப்படையிலேயே ஊடகவியலாளர் சரத் விமலரத்ன தாக்கப்பட்டார்.

அதிகாரம் என்பது ஒடுக்குமுறைக்கான ஒரு கருவி. எனவே அதை மிகவும் பொறுப்புடன் பயன்படுத்த வேண்டும். சிலர் அதிகார போதையில் உள்ளனர். அது நிதி பலம், அரசியல் பலம், உத்தியோகபூர்வ பலம். அதிகார போதையில் இருப்பவர்கள் எல்லாம் தங்கள் தேவைக்கேற்ப நடக்க வேண்டும் என்று நினைக்கிறார்கள். இல்லையெனில், அவர் தனது சக்தியைக் கொடூரமான முறையில் கட்டவிழ்த்து விடுகிறார். இந்த தீர்ப்பு அவர்களை ஒரு செயலைச் செய்வதற்கு முன் இருமுறை அல்ல ஆயிரம் முறை சிந்திக்க வைக்கும். அப்படியானால், 'குனிந்து' மன்னிப்பு கேட்கும் விதிக்கு நாம் அடிபணிய வேண்டியதில்லை.




தமிழ்Mirrorக்கு எழுதுங்கள்

www.tamilmirror.lk


தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருத்துக்களையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk




## வாழ்வியல் தரிசனம்

தான் வாழும் சமூகத்துக்கு எந்த நன்மைகளும் செய்யாமல், பிறருக்கு வேண்டுமென்றே தீமைகளைச் செய்பவர்கள், கடவுளிடம் வரம் கேட்பதில் என்ன நியாயம் இருக்கிறது.

வெளயில் உத்தமராகக் காட்டுபவர்கள், தாம் செய்யும் செயல்கள் மக்களுக்குத் தெரியாது என தப்புக்கணக்கு போடுகின்றார்கள். இத்தகையோர் அடையும் திருப்திதான் என்ன?

எவருக்காவது நன்மைகள் செய்யும்போது, ஏற்படும் திருப்தி அலாதியானது பொது நலத்தொண்டுகளில் இளைய தலைமுறையினர் ஈடுபடுவது மகிழ்ச்சியானது.

தெருவோரத்தில் கண்டெடுத்த பணப்பையை, உரியவரிடம் கையளிக்கும் நிகழ்வுகளைத் தினமும் பத்திரிகைகளில், படித்திருக்கின்றோம்

ஒருவருக்கு உதவுவது எமது இதயத்தைக் குளிரவைக்கும் செயலாகும். புற அழகை விட, அக அழகே பெரிது. மக்களை நேசிக்கும்போது, யாவரும் எம்மவர்கள் என்ற எண்ணங்கள் உருவாகின்றன.

உலக மக்கள் துன்பங்களைக் கண்டு திரும்பிப் பார்க்காமல் செல்வது மானிட தர்மம் இல்லை. இரக்கம் இல்லாமல் வாழ்பவன், நிம்மதியாக வாழ முடியாது. அன்பே அறம்.

– பருத்தியூர் பாலா. வயிரவநாதன்

### சுமந்திரனின் கருத்து:

# தமிழரசுக் கட்சியின் நிலைப்பாடா?

**முருகானந்தம் தவம்**

நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் தமிழர் தரப்பிலிருந்து தமிழ் பொது வேட்பாளர் களமிறக்கப்படவேண்டுமென்ற வலியுறுத்தல்கள் வடக்கு, கிழக்கிலுள்ள தமிழ் சிவில் அமைப்புக்களினால் விடுக்கப்பட்டும் அதற்கான நடவடிக்கைகள் முடுக்கப்பட்டுமுள்ள நிலையில், தமிழ் மக்கள் மத்தியில் அதற்கான ஆதரவும் எதிர்பார்ப்பும் எதிர்பார்த்ததை விடவும் அதிகரித்து வரும் சூழலில் ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் பொது வேட்பாளர் என்ற விடயத்தை இதுவரையில் மேலோட்டமாக எதிர்த்து வந்த இலங்கை தமிழரசுக் கட்சியின் சுமந்திரன் அணி தற்போது பகிரங்கமாக மேடைபோட்டு எதிர்க்கத் தொடங்கியுள்ளது.

ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் பொது வேட்பாளர் என்ற தமிழ்த் தேசிய அரசியல் கட்சிகள், தமிழ் சிவில் சமூகத்தின் முயற்சிக்கு எதிராக சுமந்திரன் எம்.பி. தரப்பால் ஏற்பாடு செய்யப்பட்ட 'மக்கள் மன்றில் ஈழத் தமிழர் சுயநிர்ணய உரிமை பொது நிலைப்பாடும் பொது வாக்கெடுப்பும்' எனும் தலைப்பிலான அரசியல் கருத்துக் கள நிகழ்வு யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியில் அமைந்துள்ள தந்தை செல்வா கேட்போர் கூடத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை மாலை நடைபெற்ற போதே தமிழ் பொது வேட்பாளரை நிறுத்தும் முயற்சியைத் தோற்கடிப்போம் என்றவாறாக சுமந்திரன் எம்.பியினால் பகிரங்கமாக சூளுரைக்கப்பட்டுள்ளது.

இந்த நிகழ்வில் உரையாற்றிய சுமந்திரன் எம்.பி, தமிழ்ப் பொது வேட்பாளர் விடயம் ஒரு தேவையில்லாத விஷப் பரீட்சை என்று நான் கூறுகின்றேன். ஒரு விஷப் பரீட்சையில் நாங்கள் ஈடுபட்டு அசைக்க முடியாத இந்த மக்கள் ஆணையை இல்லை என்று நிறுவுவதற்கு நாங்கள் முயற்சி செய்கின்றோமா? தமிழ் மக்களின் அரசியல் தலைவர்களாக அந்த விஷப் பரீட்சைக்கு நாங்கள் செல்லவே கூடாது என்பதுதான் என்னுடைய கருத்து. எங்கள் இருப்பையே இல்லாமல் செய்யப்போகின்ற ஒரு நிகழ்வு. இதற்கு நாங்கள் இணங்கினால் இதுவரை காலம் வரைக்கும் எங்கள் உயிர் மூச்சு என்று சொல்கின்ற எங்கள் இறைமை, எங்களுக்கான சுயநிர்ணய உரிமை அனைத்தையும் இல்லை என்று நாங்கள் சொல்கின்றதான ஒரு செயற்பாடாகத்தான் இது இருக்குமென எச்சரித்துள்ளார்.

அதுமட்டுமன்றி, தேர்தல் என்பது அரசியல் செயற்பாடு.அத்தகைய அரசியல் செயற்பாடு அரசியல் தலைவர்கள், அரசியல் கட்சிகள் முன்னெடுக்க வேண்டிய விடயம். இதில் சிவில் சமூகத்துக்குப் பொறுப்பு இருக்கின்றது. அவர்கள் ஆலோசனை சொல்லலாம்.அவர்களுடைய ஆலோசனை வரவேற்கத்தக்கது. ஆனால், இது ஒரு அரசியல் நிகழ்ச்சி. அந்த அரசியல் நிகழ்ச்சிக்காக மக்கள் சிவில் சமூகத்தினரைத் தெரிவு செய்து அனுப்பவில்லை. எங்களைத்தான் தெரிவு செய்திருக்கின்றார்கள். மக்கள் ஆணை எங்களுக்குத்தான் இருக்கின்றது. அந்தத் தீர்மானங்கள் எடுக்கின்ற பொறுப்பு எங்களுடைய கைகளில் தான் இருக்கின்றது. அதனை நாங்கள் விட்டுவிட முடியாது. அப்படி விட்டுவிட்டால் எங்களுடைய பொறுப்பை நாங்கள் உதாசீனம் செய்தவர்களாவோம் என கூறி தமிழ் சிவில் சமூகத்துக்கு எதிராகவும் சாட்டையைச் சுழற்றியுள்ளார்.

ஒரு தமிழ்ப் பொது வேட்பாளரை நிறுத்தினாலும் அதற்கு எதிராக நாங்கள் பிரசாரம் செய்ய வேண்டும் . அது ஏன் என்று கேட்டால் அவர் படுதோல்வி அடைகின்றபோது இது எங்களுடைய அரசியல் நிலைப்பாடு அல்ல. அது யாரோ செய்கின்ற கோமாளிக் கூத்து என்று நாங்கள் சொல்லக் கூடியதாக இருக்க வேண்டும். இது பிரதானமான தமிழ்க் கட்சி ஒன்றைச் சார்ந்தவன் என்ற வகையில் நான் சொல்கின்றேன். எங்கள் கட்சியினருக்கும்தான் சொல்கின்றேன். இதற்கு எதிராக மக்கள் மத்தியில் பிரசாரம் செய்ய வேண்டிய பாரிய பொறுப்பு எங்களிடத்தே இருக்கின்றது . எனவே, தமிழ் பொது வேட்பாளர் நிறுத்தப்பட்டால் அவரை தோற்கடிப்போம் எனவும் சுமந்திரன் பகிரங்கமாகவே எச்சரித்துள்ளார்.

அதுமட்டுமன்றி, தனது இந்த நிலைப்பாட்டால் தனக்கு எதிரான விமர்சனங்கள் எவ்வாறு வெளிக் கிளம்பும் என்பதையும் அறிந்துள்ள சுமந்திரன், தமிழ் பொது வேட்பாளருக்கு எதிராக மக்களை விழிப்படையச் செய்ய வேண்டியது எங்களுடைய பொறுப்பு. நாங்கள் அதிலிருந்து ஒளிந்தோடப் போவதுமில்லை. அதற்காக உடனடியாகத் துரோகிப் பட்டம் கட்டிவிடுவார்கள். இப்போது துரோகிப் பட்டம் கட்டுவது மிக இலகு. அதற்கு இன்றைக்குப் பெறுமதியே இல்லாமல் போய்விட்டது. அவ்வாறு கட்டுவதானால் கட்டுங்கள். எதைச் செய்தாலும் பரவாயில்லை என்றும் கூறியுள்ளார்.

சுமந்திரனின் 'தமிழ் பொது வேட்பாளருக்கு' எதிரான இந்த பகிரங்க போர் பிரகடனம் கட்சியின் தீர்மானமா அல்லது சுமந்திரன் எம்.பியின் தனிப்பட்ட நிகழ்ச்சி நிரலா என்பதுதான் தமிழர் தரப்பிடம் தற்போது எழுந்துள்ள கேள்வி. இவ்வாறான கேள்வி எழுவதற்குக் காரணங்களும் இல்லாமல் இல்லை.ஏனெனில், ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் பொது வேட்பாளரை நிறுத்த வேண்டும் என்ற தமிழ்த் தேசிய கட்சிகள், தமிழ் சிவில் சமூகத்தின் முயற்சிக்கு இலங்கை தமிழரசுக் கட்சியின் தலைவராகத் தெரிவு செய்யப்பட்டவரும் நீதிமன்ற வழக்குத் தாக்கல்கள் காரணமாக இதுவரை உத்தியோகப்பூர்வமாக பதவி ஏற்காமல் இருப்பவருமான சிவஞானம் ஸ்ரீதரன் முழுமையான ஆதரவு தெரிவித்துள்ள நிலையில், இலங்கை தமிழரசுக் கட்சியின் ஏனைய மூத்த தலைவர்கள் மற்றும் முக்கியஸ்தர்களும் இது தொடர்பில் பகிரங்கமாக ஆதரவையோ எதிர்ப்பையோ தெரிவிக்கவில்லை.

ஆனால், மாவட்டத்துக்கோ தமிழ் மக்களுக்கோ பிரயோசனம் இல்லை என்பதனால் பாராளுமன்ற உறுப்பினர் பதவியிலிருந்து விலக வேண்டும் என சுமந்திரன் எம்.பியினால் வலியுறுத்தப்பட்டவருமான இரா.சம்பந்தனும் அவ்வாறு வலியுறுத்திய சுமந்திரன் எம்.பியும் தான் இந்த தமிழ் பொது வேட்பாளர் என்ற விடயத்தை இலங்கை தமிழரசுக் கட்சியின் சார்பாகப் பகிரங்கமாக எதிர்க்கின்றனர். இலங்கை தமிழரசுக் கட்சியின் தற்போது வரை தலைவராகவுள்ள மாவை சேனாதிராஜாவோ அல்லது கட்சியின் மத்தியக் குழு வாக்கெடுப்பின் மூலம் பெரும்பான்மை வாக்குகளைப் பெற்று கட்சியின் தலைவராகத் தெரிவு செய்யப்பட்ட ஸ்ரீதரனோ தமிழ் பொது வேட்பாளரை எதிர்க்காத நிலையில், கட்சியில் செயற்பட முடியாதவராகவுள்ள இரா.சம்பந்தனும் கட்சித் தலைவர் பதிவுக்குப் போட்டியிட்ட நிலையில் தோற்கடிக்கப்பட்டவரும் பிரதான பதவி நிலைகளில் இல்லாதவருமான சுமந்திரனும் எதிர்ப்பதனால் இவர்களின் எதிர்ப்பு ஒரு பிரதான கட்சியின் ஏகோபித்த நிலைப்பாடாகி விடுமா என்பதே இன்று தமிழர் தரப்பில் எழுந்துள்ள கேள்வி.

தமிழ் பொது வேட்பாளரை எதிர்ப்பதற்காக சுமந்திரன் எம்.பி. தரப்பால் ஏற்பாடு செய்யப்பட்ட 'மக்கள் மன்றில் ஈழத் தமிழர் சுயநிர்ணய உரிமை பொது நிலைப்பாடும் பொது வாக்கெடுப்பும்' எனும் தலைப்பிலான அரசியல் கருத்துக் கள நிகழ்வில் இலங்கை தமிழரசுக் கட்சியின் தற்போதைய தலைவரான மாவை சேனாதிராஜா பங்கேற்றிருந்தபோதும் அவர் அதில் உரையாற்றவில்லை. அதேவேளை, ஸ்ரீதரன் பங்கேற்கவில்லை. செயற்பட முடியாத நிலையிலும் வெளிநாடுகளின் பிரமுகர்களைச் சந்திக்கும் பெருந்தலைவர் இரா.சம்பந்தனும் இதில் பங்கேற்கவில்லை.

ஆகவே " ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் பொது வேட்பாளர் என்பது விஷப் பரீட்சை ,"தமிழ் பொது வேட்பாளர் என்ற கோமாளிக்கூத்துடன் எமக்கு உடன்பாடில்லை. இதற்கெதிராக மக்கள் மத்தியில் இலங்கை தமிழரசுக் கட்சி பிரசாரம் செய்யும் 'தமிழ் பொது வேட்பாளர் நிறுத்தப்பட்டால் அவரை தோற்கடிக்க வேண்டும்' என்ற சுமந்திரன் எம்.பியின் கருத்துக்களை இலங்கை தமிழரசுக் கட்சியின் கருத்துக்களாகவோ நிலைப்பாடாகவோ எடுத்துக்கொள்ள முடியாத நிலையே உள்ளது.

இலங்கை தமிழரசுக் கட்சிக்குள் கட்சி தலைமைக்கு, கொள்கைகளுக்கு, தீர்மானங்களுக்கு கட்டுப்படாது தான் விரும்பியவாறு செயற்பட்டு வருபவர் என குற்றம்சாட்டப்படும் சுமந்திரன் எம்.பியின் தனிப்பட்ட கருத்துக்களாகவும் தனிப்பட்ட நிலைப்பாடாகவுமே இந்த எதிர்ப்பை எடுத்துக்கொள்ள வேண்டியுள்ளது என்பதே தமிழர் தரப்பின் கருத்தாகவுள்ளது.

## கடிதங்கள்

### ஹட்டன் பஸ் தரிப்பிடம்



ஹட்டன் பிரதான பஸ் தரிப்பிடத்திலுள்ள பயணிகள் தங்குமிட கட்டடம் மிகவும் அசுத்தமான நிலையில் காணப்படுவதால் பயணிகள் கடும் சிரமத்திற்குள்ளாகி வருகின்றனர்.

பயணிகள் தங்குமிட கட்டடத்திற்குள் குப்பைகள், வெற்று மது போத்தல்கள், பிளாஸ்டிக் போத்தல்கள் என ஆங்காங்கே வீசப்பட்டு, கட்டிடத்தின் மூலையில் ஏராளமான குப்பைகள் குவிந்து கிடக்கிறது.

பஸ்ஸூக்காக காத்திருந்த சில பயணிகள் குப்பைக் குவியலில் வெற்றிலையைத் துப்புகின்றனர். வாகன நிறுத்துமிடத்தில் பயணிகள் அமர்வதற்காகக் கட்டப்பட்டுள்ள இருக்கைகள் பாதிக்கப்பட்டுள்ளன. குப்பை மேட்டிலிருந்து கடும் துர்நாற்றம் வீசுவதால், பயணிகள் பெரும் அசௌகரியங்களுக்கு உள்ளாகியுள்ளன.

பயணிகளின் இருக்கைகள் தெருநாய்களால் கிழிந்து நாசம் செய்வதாக, பயணிகள் கூறுகின்றனர். சில சந்தர்ப்பங்களில், அந்த இருக்கைகள் நாய்களின் தூங்கும் படுக்கைகளாக மாறி விட்டன. மலையகத்தில் அழகான நகரம் என்று ஒரு காலத்தில் அழைக்கப்பட்ட ஹட்டன் நகரம் தற்போது குப்பைகள் நிறைந்த அசுத்தமான நகரமாக மாறியுள்ளது.

இவை தொடர்பில் சம்பந்தப்பட்ட தரப்பினர் உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும் என்று பயணிகள் கேட்டுக்கொண்டுள்ளனர்.

– காமினி பண்டார இளங்கக்கோன்



10ஆவது ஆண்டில் கால் பதிக்கும்

# மலையக கலாசார ஒன்றியம்

மெய்யன்

மலையகத்தை பிறப்பிடமாகக் கொண்ட ஐந்து இளைஞர்கள் ஒன்று கூடி தான் பிறந்த பிரதேசத்திற்கு சேவை செய்யும் முகமாக 'கல்விக்கு முதலிடம்' என்ற தலைப்பில் மலையக மாணவ மாணவிகளின் முன்னேற்றத்திற்காக மலையக கலாசார ஒன்றியம் என்ற பெயரில், அமைப்பினை உருவாக்கி பல்வேறுபட்ட சேவைகளை செய்து வருகின்றனர்.

குறிப்பாக இலவசக் கல்வி கருத்தரங்குகள், ஊடக சேவைகள், பரிசளிப்பு விழாக்கள், வறுமைக் கோட்டின் கீழ் வாழும் மக்களுக்கு உணவுப் பொதிகள், பொருட்கள் வழங்குதல், வறுமையான பாடசாலை விழாக்கள் சிலவற்றை முன்னின்று செயற்படுத்தல் போன்ற இன்னோரன்ன சேவைகளை செய்து வருகின்றனர்.

மலையக கலாசார ஒன்றியம் பல்வேறுபட்ட தனியார் சமூக அமைப்புகளுடன் இணைந்து சேவைகளை செய்து கொண்டு வருகின்றது. அதில் குறிப்பாக ஆஞ்சநேயர் தேவாலயம் , lions club 306 B2 Ocean city, Ideal academy, Lanka children's Foundation, உயிர் நேயம் உதவும் கரங்கள், vishvam campus ccem campus, இரத்தினபுரி உதவும் கரங்கள் போன்ற அமைப்புகளுடன் இணைந்து சேவைகளை முன்னெடுக்கின்றமை குறிப்பிடத்தக்கது.





> 10ஆவது ஆண்டில் கால் பதிக்கும் அதேவேளை, நினைவு முத்திரை ஒன்றும் வெளியிட்டு வைக்கப்பட உள்ளமை சிறப்பு அம்சமாகும்







இந்த அமைப்பின் வளர்ச்சிக்காக மன்றத்தின் தலைவர் K.J.சிவராஜேஸ்வரன் மற்றும் உறுப்பினர்கள் அனுசரணையாளர்கள் வர்த்தக பிரமுகர்கள் சமூக செயற்பாட்டாளர்கள் போன்றவர்களின் ஒத்தாசைகள் மகத்தானவை தலைவராக K.J.சிவராஜேஸ்வரன், செயலாளராக ரகு இந்திரகுமார், பொருளாளராக S.விக்னேஸ்வரன், உப.தலைவர்களாக R.செல்வகுமார், P.விஜயக்குமார். ஆகியோரும்,

சட்ட விவகார ஆலோசகராக R.பிரணவா, ஊடக ஆலோசகராக A அஜித்குமார், போசகராக Lion K.S.மனோகரனும், K.சதீஷும் P.பாலகிருஷ்ணனும் நிர்வாக குழு ஆலோசகராக P.சேதுராமன், R.S.சுபாஷ் ஆகியோரும், மாணவப் பிரிவுப் பொருப்பாளர், S.சஞ்ஜீவன் நிர்வாக குழு உறுப்பினர்களாக, முருகன் மகளிர் அணியின் நிர்வாக குழு உறுப்பினர்களாக திருமதி.யோகலட்சுமி, திருமதி.யோகராணி, திருமதி.உமாதேவி, திருமதி.லாலனி போன்றோரும் செயற்படுகிறார்கள்.

பத்தாண்டு கால சேவையில் கால்பதிக்கும் மலையக கலாசாரம் ஒன்றியம் தமக்கு உதவி ஒத்தாசை வழங்கிய அனைவருக்கும் மலையக கலாசார ஒன்றியத்தின் சார்பில் நன்றிகளை தெரிவித்துக் கொள்கின்றனர். மேலும் அதன் பணிகளை தொடர்ந்தும் முன்னெடுக்கத் திட்டமிட்டுள்ளனர்.

10ஆவது ஆண்டில் கால் பதிக்கும் அதேவேளை, நினைவு முத்திரை ஒன்றும் வெளியிட்டு வைக்கப்பட உள்ளமை சிறப்பு அம்சமாகும்.

# 'கோடி அற்புதர்' புனித அந்தோனியாரின் பெருவிழா

ஜூன் 13ஆம் திகதியாகிய இன்று, 'கோடி அற்புதர்' என கொண்டாடப்படும் புனித அந்தோனியாரின் திருவிழாவாகும். கண்டி, கொச்சிக்கடை, பாசையூர், மானிப்பாய் போன்ற பிரபல்யமான அந்தோனியார் தேவாலயங்கள் உட்பட பெரும்பாலான அந்தோனியார் தேவாலயங்கள் இன்று புனித அந்தோனியாரின் திருவிழாவை கோலாகலமாகக் கொண்டாடுகின்றன.



1231ஆம் ஆண்டு, ஜூன் மாதம் 13ஆம் திகதி, இறுதி திருவருட்சாதனங்களைப் பெற்ற பின்னர், இறைவனில் இளைப்பாறிய தினத்தையே புனித அந்தோனியாரின் திருவிழாவாகக் கொண்டாடப்படுகின்றது.

புனித அந்தோனியார் போர்த்துக்கல் நாட்டவர்.

1195ஆம் ஆண்டு ஒகஸ்ட் மாதம் 15ஆம் திகதி விஸ்பன் நகரில் பிறந்தார். அவரது பெற்றோர்கள் மார்டின், மேரி இவர்களுக்கு மூன்றாவதாகப் பிறந்த குழந்தைக்கு பெர்டினாந்து என்று பெயரிட்டனர்.

சிறு வயதிலிருந்தே இறைப்பற்றில் திளைத்து வளர்ந்த பெர்டினாந்து, ஒருநாள் தேவாலயத்தில் உருக்கமாகச் செபித்துக் கொண்டிருக்கும் போது, திடீரென்று பயங்கர உருவத்தில் அலகை தோன்றியது. சிறுவன் அஞ்சி ஓடவில்லை மனத் துணிவுடன், தான் முழந்தாளிலிருந்த சலவைக் கல்மேல் திருச்சிலுவை அடையாளத்தை வரைந்தான். பிசாசு வெகுண்டு ஓடியது. அந்தக் கல்லில் பதித்த திருச்சிலுவை அடையாளத்தை இன்றும் காணலாம்.

புனித அகுஸ்தின் துறவற சபையில் சேர்ந்த பெர்டிணாண்டு, 1219ஆம் ஆண்டில் 24ஆம் வயதில் குருப்பட்டம் பெற்றார். 1221ஆம் ஆண்டு புனித அகுஸ்தீன் சபையை விட்டு விலகி, பிரன்ஸிஸ்கன் சபையில் சேர்ந்தார். அப்போதுதான், அந்தோணி என்று தனது பெயரை மாற்றிக்கொண்டார்.

மறையுரையாற்றுவதில் புகழ்பெற்ற அந்தோனியார், உள்ளத்தை ஊடுருவும் ஆழ்ந்த கருத்துகளை மக்கள் மத்தியில் பிரசங்கித்தார். தாம் வாழ்ந்த காலத்திலும் இறப்புக்குப் பின்னரும் கடவுள் அளித்த கொடையினால் அனேக புதுமைகள் செய்தார். இதனால் 'கோடி அற்புதர் புனித அந்தோனியார்' என்ற

சிறப்புப் பெயரைப் பெற்றார். அந்தோனியார் குழந்தை இயேசுவைக் காட்சியில் கண்டு கையில் ஏந்தியதாகவும் ஆகவேதான் படங்களில் அவரது கையில் குழந்தை இயேசுவும் மற்றொரு கையில் திருமறை நூலைக் கையில் வைத்திருப்பதாகவும் காட்டப்படுகிறது.

'கோடி அற்புதர்', 'பதுவை பதியர்', 'பிசாசுகளை நடு நடுங்கச் செய்பவர்', 'காணாமல் போனவற்றைக் கண்டுபிடித்துக் கொடுப்பவர்' போன்ற அடைமொழிகளும் புனித அந்தோனியாருக்கே சொந்தம்.

புனித அந்தோனியார் இறந்து 336 ஆண்டுகளுக்குப் பின்னர், அவருடைய கல்லறை தோண்டப்பட்டபோது, அவருடைய நாக்கு மட்டும் அழியாமல் இருந்தது. அந்த நாக்கு, இன்றும் புனிதத்துவம் கெடாது பாதுகாக்கப்பட்டு வருகிறது. இந்த நாக்கின் ஒரு சிறு பகுதி, கொச்சிக்கடை புனித அந்தோனியார் திருத்தலத்திலும் பக்தர்களின்



வழிபாட்டுக்கு ஏற்றவாறு, பாதுகாக்கப்பட்டுள்ளது.

கொச்சிக்கடை புனித அந்தோனியார் திருத்தலம் இன, மத வேறுபாடு இன்றி அனைவரும் வந்து வழிப்படும் புனித திருத்தலமாகத் திகழ்கின்றது.

கொச்சிக்கடை புனித அந்தோனியாரின் திருத்தல வரலாறு குறித்து பல்வேறு ஆவணங்கள் காணப்படுகின்றன. போர்த்துக்கேயரால் இலங்கைக்குப் பரப்பப்பட்ட கத்தோலிக்க மதம், ஒல்லாந்தரின் வருகையோடு கத்தோலிக்க மதத்தை வழிபடுவதில் தடைகள் ஏற்படுத்தப்பட்டது.

இக்காலப்பகுதியில் தான் கொச்சினிலிருந்து அந்தோணி என்ற கத்தோலிக்க மத போதகர் கொழும்புக்கு வந்தார். எனினும் துன்புறுத்தல்கள் காரணமாக, அவர் வியாபாரி போல் மாறு வேடமிட்டு, பகலில் (இன்றைய மலிபன் தெரு) கடையில் மீன் விற்றார். இரவில் அவர் கத்தோலிக்கர்களை இனம் கண்டு வழிபாடுகளை நடத்தினார். சிறிதுகாலத்தில் இதை அறிந்த ஒல்லாந்தர்கள் அந்தோணியைத் தேடினர்.

மீனவ சமூகத்தினர் அதிகமாக வாழ்ந்த முஹுதுபொடவத்தை என்ற பகுதிக்கு அவர் வந்தபோது, கடல் அரிப்பால் தாம் பாதிக்கப்படுவது பற்றி மீனவர்கள் அவரிடம் முறையிட்டனர். கடல் அரிப்பைத் தடுத்தால், டச்சு வீரர்களிடமிருந்து பாதுகாப்பதாகவும் அவர்கள் உறுதியளித்தனர்.

அந்தோணி மணலில் ஒரு சிலுவையை நட்டு, மண்டியிட்டு மூன்று நாள்களாக உண்ணா நோன்பிருந்து பிரார்த்தனை செய்தார்.

அவர் பிரார்த்தனை செய்து கொண்டிருந்தபோது, கடல் பின்வாங்கத் தொடங்கியது. அந்த இடம் தான், இன்றைய கொச்சிக்கடை புனித அந்தோனியார் திருத்தலம் அமைந்திருக்கும் இடமாகும்.

அந்தோணியின் அதிசயத்தை அறிந்த டச்சு ஆளுநர் வில்லெம் மௌரிட்ஸ் ப்ரூய்னின்க் (1739 - 1742), அதிசயம் நிகழ்ந்த நிலத்தை அந்தோணிக்கு வழங்கினார். அங்கே அவர் சிறு கடையையும் சமய பணியையும் மேற்கொள்வதற்கு ஆளுநரால் அனுமதி வழங்கப்பட்டது.

அந்தோணி, ஆரம்பித்த சிறு கடை, 'கடே' என்று அழைக்கப்பட்டது. கொச்சினில் இருந்து வந்தவரின் கடை என்பதால் 'கொச்சியாகே கடே' என்பது காலப்போக்கில் 'கொச்சிக்கடை' என அழைக்கப்பட்டது. இந்த நிலம் அதிகாரப்பூர்வமாக டச்சு கிழக்கிந்திய கம்பனியால் ஜனவரி 20, 1790அன்று, தேவாலயத்துக்கு ஒப்படைக்கப்பட்டது. அந்தோணி இறந்தபோது அவரின் உடலும் இந்தத் தேவாலயத்தில் அடக்கம் செய்யப்பட்டது. இன்று, நாம் காணும் புனித அந்தோனியாரின் சிறிய பீடம்தான், கடலரிப்பு அற்புதத்தின் போது மரச்சிலுவை நாட்டப்பட்ட இடமாகும்.

1806ஆம் ஆண்டு அத்திவாரம் இடப்பட்டு 1834ஆம் ஆண்டு புதிய தேவாலயம் கட்டும் பணி தொடங்கப்பட்டது. அந்த ஆண்டைத்தான் ஆலயத்தின் தொடக்க நாளாக இன்றுவரை கணிக்கப்பட்டுவருகிறது.

புனித அந்தோனியார் திருத்தலம் கத்தோலிக்க மக்களுக்கு மட்டுமன்றி அனைத்து இன, மத மக்களின் நம்பிக்கைக்கும் அபிமானத்துக்கும் உரியதாகும். தம்மை அண்டி வந்தவர்களை, புனித அந்தோனியார் வெறுங்கையோடு அனுப்ப மாட்டார் என்ற நம்பிக்கை அனைத்து மக்களுக்கும் உண்டு.

மனநலம், உடல்நலம், குடும்ப நலம், நோய்கள், பல்வேறு உபாதைகள் மற்றும் இன்னோரன்ன தமது பிரச்சினைகளை அந்தோனியார் கோவிலில் மண்டியிட்டு மன்றாடினால் தீர்வு கிட்டும் என்ற நம்பிக்கையை இந்த திருத்தலம் மக்களுக்கு உணர்த்தி வருகிறது.

- நன்றி: அ.மேரி சுனித்தா





# திருமணம்



கனகசூரியம் யோகானந்தன்

மனித வாழ்வில் துன்பங்கள் எங்கிருந்து வருகின்றன என் பதை இறைவனைத் தவிர யார் தான் உணர்ந்து கொள்ள முடியும். தன் உள்ளத்து உணர்வுகளால் ஏற் பட்ட கண்ணீரை, விரல்களால் அப்படியே துடைத்து விட்டுப் புரண்டு படுத் தாள் கமலினி, மண்ணில் அங்கும் இங்கும் காணப்படும் மனிதக் கூடுகளில், இடுப்புடைந்து நிற்கும் ஒருவனைப்போல் சிறு குடிசை.. வீட்டில் தந்தை இருக்கிறார் என்பதைப் பறைசாற்றும் வறண்ட இருமல் சத்தம் கேட்டுக் கொண்டிருந்தது.

குடிசைக்கு முன்பாக, தகரத்தில் மறைக்கப்பட்ட வாசல்.வறுமையின் அடையாளமாகக் குடிசை ஓரத்தில் படுத்திருக்கும் நாய்! அருகில் குலை தள்ளிய தென்னைகள் அங்கொன்றும் இங்கொன்றுமாக தம்மை இனங்காட்டி அசைந்து கொண்டிருந்தன. குடிசையின் மத்தியில் புரண்டு கொண்டிருந்தாள் கமலினி...

அவளுக்கு நித்திரை வரவில்லை. எப்படி வரும்? இரண்டு வீடு தள்ளி கல்யாணம் அது வேறு யாருக்கோ அல்ல... அவளின் உயிர்த்தோழி வேணிக்கு! உணர்ச்சிகளின் உந்துதல்களுக்கு மனதை அப்படியே அலைபாயவிட்டபடி படுத்திருக்கிறாள் கமலினி. கமலினியின் சிறுபராயத்து தோழி வேணி, விடிந்ததும் மணப்பெண்ணாகி விடுவாள். நாளை பாதை மாறிப் புதிய பயணம் தொடங்கி விடும். ஆனால் கமலியின் நிலை?..

கமலினியைவிட ஒருவயது, வேணி குறைந்தவள். பாடசாலையில் ஒன்றாகப் படித்தவர்கள். ஆனால்? கல்யாண விடயத்தில் முந்தி விட்டாள். கல்யாணத்துக்கு, பந்தல் கால் நாட்டி வீடும் -தெருவும் அலங்காரம் செய்யப் பட்டிருந்தது. இதனைப் பார்த்து கமலினியின் மனதில் சஞ்சலங்கள் ஏற்பட்ட போதும் வெளியில் அவள் காட்டிக் கொள்ளவில்லை... கல்யாண முகூர்த்தம் நெருங்க நெருங்க உறவினர்கள் அனைவரும் பிள்ளையார் கோவிலை நிறைத்து விட்டார்கள். தாலிகட்டுவது மட்டுமே பாக்கியாக இருந்தது.

> **விதிவசத்தால் சாந்தன் வேணியின் கணவனாகி விட்டான். கமலினியின் தந்தை எவ்வளவோ முயற்சி செய்தார். தனது மகளுக்கு சாந்தனை திருமணம் செய்து வைக்க ஆனால்... காலமோ வேறுவிதமாகத் தீர்மானிக்க சீதனம் இல்லாமையும், வறுமையும் தடைபோட்டு விட்டன**

கோவிலின் ஓரமாக ஒதுங்கி நின்றாள் கமலினி! மங்கள வாத்தியங்களைத் தாள வரிசை தப்பாமல் வாசித்துக் கொண்டிருந்தார்கள். அலங்கரிக்கப்பட்ட மணமே டையில் நெருக்கமாக மணமக்கள் அமர்ந்திருந்தனர். கமலினியின் இளமை நரம்புகள்

சூடாகி வெடித்து விடும் போல் இருந்தது. அவளுக்கு... எல்லாவற்றையும் உதறி எறிந்துவிட்டு, மணப்பெண் அமர்ந்திருக்கும் இடத்தில் தான் போய் அமர்ந்தால் என்ன? என்ற எண்ணம் அடி மனதில் ஊற்றெடுத்தது. ஓடிப்போய் அமரவேண்டுமென்ற துறுதுறுப்பு முயன்றாலும் முடியாது என்ற ஏக்கம் அவளுடைய ஏழ்மை எல்லாம் ஒன்று சேர்ந்து அவளைத் தடுத்தது. போராட்டங்களுக்கு நடுவில் உடல் வியர்த்தது அடிவயிற்றில் ஏதோ செய்வது போன்ற உணர்வு தீயை உண்டாக்கி விடுமோ? என்று

> **காலத்தை நோவதா? விதியை நினைத்து வருந்துவதா? அவளுக்கு தெரியவில்லை. பணம் எத்தனை? சக்தி படைத்தது. தனது வாழ்வை அப்படியே புரட்டிப் போட்டு விட்டதே! ஏழையாகப் பிறந்த பெண்களுக்குக் கிடைப்பது பாவமா? சாபமா? ஏழ்மையைக் கொடுத்த இறைவன், அவளுக்கு அழகு என்ற செல்வத்தைத் தாராளமாகவே கொடுத்தது ஏன்?**

சொல்லும் அளவிற்கு மூச்சுக் காற்று சூடேறியிருந்தது. பூசகர் விரைந்து வேதமந்திர உச்சாடனங்களை சொல்ல' கெட்டிமேள ஓசையோடு, வேணியின் கழுத்தில் தாலி ஏறிக்கொண்டது. மாப்பிள்ளை சாந்தன் யார்? என்றவாறு கமலினி வாய்க்குள் முணுமுணுதுக் கொண்டாள். ஊர்ப் பெரியவர்கள் கடந்த ஐந்து மாதங்களுக்கு முன்பு இந்த மாப்பிள்ளையைத்தான் கமலினிக்குப் பேசி வந்தார்கள். விதிவசத்தால் சாந்தன் வேணியின் கணவனாகி விட்டான். கமலினியின் தந்தை எவ்வளவோ முயற்சி செய்தார். தனது மகளுக்கு சாந்தனை திருமணம் செய்து வைக்க ஆனால்... காலமோ வேறுவிதமாகத் தீர்மானிக்க சீதனம் இல்லாமையும், வறுமையும் தடைபோட்டு விட்டன.

கமலினியின் தந்தை "நான் யாரிடமேனும் கடன் வாங்கித் தருகிறேன்" எனக் கூறியும் மாப்பிள்ளை வீட்டார். அதைக் காதில் வாங்கிக் கொள்ள வில்லை. சீதனமும் வேண்டும் சிங்காரியும் வேண்டும் என நினைப்பவர்கள் எப்படி? ஏற்றுக் கொள்வார்கள். கமலினியின் தந்தை ஏழைமட்டுமா? சிறிய நோயாளியும் கூட... நினைவுகள் பட்டாசு போல கமலினியின் மனதில் வெடித்துச்சிதறின. பட்டாசுச் சத்தம் வேட்டொலி போல் திருமண வீட்டில் கேட்டுக் கொண்டிருந்த

கல்யாண ஆரவாரம் அடங்கிப் போக, விருந்து கொண்டாட்டமென ஊரே கலகலப்பாகிக்கொண்டது. மனதில் தோன்றிய எண்ணம் புயலாக - புறப்பட்டுப் போக, கமலினி அப்படியே சோர்ந்து போனாள். காலத்தை நோவதா? விதியை நினைத்து வருந்துவதா? அவளுக்கு தெரியவில்லை. பணம் எத்தனை? சக்தி படைத்தது. தனது வாழ்வை அப்படியே புரட்டிப் போட்டு விட்டதே! ஏழையாகப் பிறந்த பெண்களுக்குக் கிடைப்பது பாவமா? சாபமா? ஏழ்மையைக் கொடுத்த இறைவன், அவளுக்கு அழகு என்ற செல்வத்தைத் தாராளமாகவே கொடுத்தது ஏன்? எப்பொழுதும் ஒற்றைச் சடை போட்டிருப்பாள்! நெற்றியில் பிறை நிலவாக ஒற்றை திருநீற்றுப் பூச்சி காற்றில் மிதக்கும் அவள் கூந்தல் புதிய சங்கதி பேசும். மீண்டும் கண்களில் வடிந்த நீர் அவள் எண்ணத்தில் தோன்றிய கனவுகள், கற்பனைகள், ஆசைகள் எல்லாவற்றையும் ஒன்றாக நனைத்துச் சென்றது. நெஞ்சு விம்மித் தணிந்தது. நாவறண்டு தாகமெடுத்தது.செம்பிலிருந்த தண்ணீரை மடமடவென குடித்துமுடித்தாள். தாகம் தீரவில்லை அதைத் தீர்க்கும் வழியை எண்ணியவளாய் புதிய வாழ்விற் காக தன்னைத் தயார்படுத்திக் கொண் டாள்...



# பீட்டர் மரியதாஸ் ஆகிய நான்

பீ.மரியதாஸ்
12, St. Leonards Bazaar,
HALGRANOYA.
petermariadhas@gmail.com +94 717197787

தேயிலைத் தோட்ட லயத்தில் பிறந்து லயங்களிலும் தேயிலை மலைகளிலும் சுற்றித் திரிந்து அம்மாவுக்கு தேத்தண்ணி கொண்டு போய்க் கொடுத்து, கொழுந்து பறித்துக் கொடுத்து, அய்யாவுக்கும், அண்ணன்மாருக்கும் கல் உடைக்கவும், முள்ளு குத்தவும், கான் வெட்டவும், கவ்வாத்து வெட்டவும் ஒத்தாசை புரிந்து தேயிலை மலைகளின் வாசனையை நுகர்ந்து வளர்ந்தவன் நான்.

வளர் இளம் பருவத்தில் தோட்ட வாழ்க்கையின் கொடூர வசீகரத்தினை அனுபவித்து அதன் மாற்றத்திற்கான மார்க்கங்களைத் தேட ஆரம்பித்தவன். இதனால் இளம் பராயத்திலேயே சமூக அரசியல் தொழிற்சங்கத் துறைகளில் ஆர்வம் ஏற்பட்டது. எனது எழுத்து முயற்சிகள் இவற்றிலிருந்தே சுரந்தன. இதற்கு தோதாக எனது கல்வி பல்கலைக்கழக படிப்புச் சூழல்கள் அமைந்தன.

ஹட்டன்-ஹைலன்ஸ் கல்லூரியில் படித்த காலத்தில் இரா.சிவலிங்கம், எஸ்.திருச்செந்தூரன், பி.ஏ.செபஸ்டியன் போன்ற ஆசிரியர்கள் எனது வாஞ்சைக்கு வலு சேர்ப்போராகவும், வழிகாட்டிகளாகவும் அமைந்தனர்.

உயர்தரப் பரீட்சை எழுதிய பின்னர் மல்லிகைப்பூ உயர்கல்வி நிலையம், செங்கொடி சங்கக் காரியாலயம், மக்கள் அச்சகம் என சுழன்று இயங்கிய வேளையில், பள்ளி சகபாடிகளான எம்.வாமதேவன் (முன்னாள் ஆலோசகர் மலைநாட்டு புதிய கிராமங்கள், உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் சமூக அபிவிருத்தி அமைச்சு), சி.நவரட்ண (சமூக அபிவிருத்தி அமைச்சின் முன்னாள் மேலதிகச் செயலாளர்), கு.செல்வராஜா, பேராசிரியர் தை தனராஜ், அயூப்கான், எம்.இராமலிங்கம் (முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் (1989-1994), ஈரோஸ்) ஆகியவர்களோடு செங்கொடி சங்க ஒ.ஏ.ராமையா, ரொசாரியோ பெர்ணான்டோ, சுந்தரம், திலகர், எஸ்.சந்திரமோகன் உட்பட தோழர்களின் தோழமையோடு உயர்கல்வி நிலையத்தில் ஆர்.இராமலிங்கம் (லண்டன்), கே.மெய்யநாதன் (முன்னாள் ஹட்டன் ஹைலன்ஸ் கல்லூரி அதிபர்), எம்.ராஜாங்கம் (கண்டி அசோக வித்தியாலய ஆசிரியர்), ஆர்.விஸ்வலிங்கம், எம்.நாகலிங்களம் (கல்விப் பணிப்பாளர்), ஹைலன்ஸ் எஸ்.சரவணப்பிரகாசம் என நட்பு வட்டம் விரிவடைந்தது.

கொழும்புப் பல்கலைக்கழகத்தில் சேர்ந்த போது, சக மாணவனாக வந்த மாத்தளை வி.சண்முகம் எங்களோடு ஐக்கியமானார். இங்கு எங்களுக்கு ஆனந்த குணதிலக்க (கம்கரு பத்திரிகை ஆசிரியர்) போன்ற சீனசார்பு கம்யூனிஸ்ட் கட்சி தோழர்களின் தொடர்பு ஏற்பட்டது.

பேராதனைப் பல்கலைக்கழகத்திற்கு வந்த பின்னர் தோழர் நிஹால் டயஸ், தோழர் சரத் விஜயசிங்க (கேகாலை மாவட்ட மக்கள் விடுதலை முன்னனி (J.V.P.) 1971 கிளர்ச்சியின் பொறுப்பாளர்) உட்பட பல தோழர்களின் தொடர்போடு நைனா மொஹமட் என நட்பு வட்டம் விரிவானது. சோ.சிவகுரு, யாழ்ப்பாணம் விஸ்வானந்த தேவன், பேராசிரியர் சி.சிவசேகரம் போன்ற தோழர்களோடு சேர்ந்து பயணிக்கத் தொடங்கியதோடு தொழிற்சங்கவாதி கண்டி ஜெயரட்ண மல்லிகாகொடவோடு நெருக்கம் ஏற்பட்டது.

கண்டியில் மு.சி.கந்தையா, அரு.சிவானந்தன், எம்.தங்கவேல், ஆ.கணேஷ், சி.பன்னீர்செல்வம், மகியாவ இரா.இராமன் போன்ற தோழர்களின் அரவணைப்பு கிடைத்தது. கொழும்பில் பல்கலைக்கழகத்தில் படித்த காலத்தில் தோழர் இளங்கீரன் (தொழிலாளி பத்திரிகை, ஜனவேகம் பத்திரிகை பிரதம ஆசிரியர்) ஏற்பட்ட நெருக்கமும், செ.கணேசலிங்கன் (நாவலாசிரியர், குமரன் சஞ்சிகை ஆசிரியர்), கொட்டகல கல்மதுரைத் தோட்ட எஸ்.எம்.கார்மேகம் (பத்திரிகையாளர் வீரகேசரி உதவி ஆசிரியர்), கே.வி.எஸ்.வாஸ் (பிரதம ஆசிரியர் வீரகேசரி) ஆகியோரோடு ஏற்பட்ட தொடர்பும் எனது கண்ணோட்டத்தை விசாலிப்பதற்கு உதவின.

எனது நட்பு, தோழமை வட்ட விரிவாக்கத்தோடு, எனது இயக்க செயற்பாடுகள் விரிவு அடைந்தன. பீட்டர் மரியதாஸ் ஆகிய நான் நானாக நிலைத்து இருப்பதற்கான பகைப்புல திறவுக்காகவே மேலே குறிப்பிட்டுள்ள நீண்ட நாமாவளி பட்டியல்.

கொழும்புப் பல்கலைக்கழகத்தில் நாங்கள் பயிலத் தொடங்கியபோது, எங்கள் ஆசான் இரா.சிவலிங்கத்தின் ஆலோசனையின் பெயரில் எஸ்சொக்கலிங்கம் (பட்டயக்கணக்காளர்), எஸ்.திருச்செந்தூரன் (ஓய்வுபெற்ற கல்லூரி அதிபர்), எஸ்.பிலிப் ராமையா (ஓய்வுபெற்ற கல்லூரி அதிபர்), எஸ்.தாயுமானவன் (சட்ட வல்லுநர்), எஸ்.சந்திரசேகரன் (தற்போது கனடாவில் வாழ்பவர்) ஆகியோர் எங்களுக்கு உதவிக்கரம் நீட்டி, எங்களது சுயத்துவத்திற்கு ஊக்கியாக இருந்தனர்.

பதுளையில் சமூக அரசியல் செயற்பாட்டாளர்களான பேராசிரியர் சோ.சந்திரசேகரன் (முன்னால் கல்வியியல் துறை பீடாதிபதி கொழும்பு பல்கலைக்கழகம்), நைனா முகம்மது (அட்டாளைச்சேனை ஆசிரியர் பயிற்சி கல்லூரி அதிபர்) போன்ற செயற்பாட்டாளர்களோடு இனங்காணப்பட்டவர் பேராசான் மு.நித்தியானந்தன். கொழும்பு பல்கலைக்கழகத்தில் மாணவனாக இருந்த காலத்தில் எமது அன்றைய அரசியல் பயணத்தில் இணைந்து செயற்பட்ட முக்கியமான ஒருவர்.

இந்தக் கட்டத்தில் நான் சந்தித்த இளைஞர்களில் ஒருவர் எச்.எச்.விக்ரமசிங்க (மாத்தளை செல்வா), கொழும்பில் ஒரு மூலையிலிருந்து இன்னொரு மூலைக்கு ஓடித்திரியும் துடிதுடிப்பான இளைஞர். அன்று அவரிடம் காணப்பட்ட சமூக வாஞ்சை என்னைக் கவர்ந்தது. அவரே நான் நினைத்துப் பார்க்காத எனது கட்டுரைகளை உள்ளடக்கிய நூல் ஒன்றினை வெளியிட வேண்டுமென்று விடாப்பிடியாக என்னை எழுதவைத்து, எனது நெம்புகோலாக செயற்பட்டார்.

கடந்த ஆண்டின் (2023) ஆரம்பகட்டத்தில் மலையகத் தமிழர் இங்கு வந்து 200 வருடங்கள் ஆகிவிட்டன என்ற செய்தி ஊடகங்களில் வெளியானபோது எனக்கு இந்த கால வரையறையைப் பற்றி சந்தேகம் ஏற்பட்டது. இதனைப் பற்றிய தேடல்களில் போது பல தகவல்கள் கிடைத்தன. அவை பல்கிப்பெருகிய போதுதான் எனது இயலாமை, போதாமைப் பற்றி புரிந்துகொள்ள முடிந்தது.

பின்தள்ளப்பட்ட சமூகம் ஒன்றைப் பற்றிய ஆய்வுச்சுரங்கம் ஆழமும் அகலமுமானது. சேர்த்த குறிப்புக்களைக் கொண்டு சில கட்டுரைகளை எழுதத் தொடங்கினேன். அவை வீரகேசரி வார வெளியீடு, தினகரன் வாரமஞ்சரி பத்திரிகைகளில் பிரசுரிக்கப்பட்ட போது அவற்றைத் தொகுத்து நூலாக வெளியிட வேண்டுமென்று கே.மெய்யநாதன் ஆலோசனைக் கூறியதோடு வெளியிட்டால் ஆவணப்பயன்பாடாக இருக்கக்கூடும் என்று அபிப்பிராயம் கூறியபோது எனக்கும் அவ்வாறான ஆர்வம் துளிர்த்தது. அந்த தருணத்தில்தான் எச்.எச்.விக்ரமசிங்க (விக்கி) என்னுடன் தொடர்புகொண்டு இதனை செய்தே ஆகவேண்டும் என்று ஊக்கப்படுத்தியதோடு வேகமாக செயற்படவும் வைத்தார்.

அண்மைக்காலத்தில் விக்கியும், லண்டனில் வாழும் நித்தியும் சேர்ந்து பத்திரிகையாளர் எஸ்.எம்.கார்மேகம் 'வாழ்வும் பணியும்' என்ற நூலையும், சி.வி. வேலுப்பிள்ளை 1958-1959களில் தினகரனில் எழுதிய கட்டுரைகளைத் தொகுத்து மலையக அரசியல் 'தலைவர்களும் தளபதிகளும்' என்ற நூலையும் வெளியிட்டனர். இரண்டும் ஆவணமாக பயன்படக்கூடியவை. இவற்றோடு சக்தி மிக்க ஆக்க இலக்கியவாதிகளான சாரல் நாடன் எழுதிய 'வானம் சிவந்த நாட்கள்', மாத்தளை பெ.வடிவேலனின் 'வல்லமை தாராயோ' என்ற சிறுகதை தொகுதியினையும், மாத்தளை மலரன்பனின் தமிழ் மொழிபெயர்ப்பான பிறமொழி சிறுகதைகள் அடங்கிய 'கொலுஷா' என்ற நூலையும் பதிப்பித்து வெளியிட்டுள்ளனர்.

நித்தியும் விக்கியும் இலங்கையின் அரசியல் வரலாற்றில் குறிப்பிடத்தக்கவர்கள். இவ்விருவரையும் பற்றிய சிறுகுறிப்பை இங்கு பதிவு செய்வது பொருத்தமானது.

1960களின் முற்பகுதியில் மலையகத்தில் தோன்றிய விழிப்புணர்வு பிரவாகத்தின் பிரதிநிதிகள் இவர்கள். மலையகத்தில் பகுத்தறி வித்துக்களைத் தூவிய பதுளை மண் உருவாக்கிய சிந்தனையாளர்களில் ஒருவரான மு.நித்தியானந்தன் பன்முக ஆற்றல்களின் சொந்தக்காரர்.
இரா.சிவலிங்கம் இலங்கை வானொலியில் தொகுத்து வழங்கிய குன்றின் குரல் நிகழ்ச்சியினை அவருக்குப் பின்னர் இவரிடம் அப்பொறுப் பினைக் கொடுத்ததன் மூலம் அவரின் ஆற்றலை
இரா.சிவலிங்கம் அடையாளம் கண்டுள்ளதைக் காட்டுகின்றது. கொழும்பு பல்கலைக்கழகத்தில் பட்டம் பெற்று தினகரன் பத்திரிகையின் பிரதி ஆசிரியராக பணியாற்றியவர்.

கூலித் தமிழ் போன்ற வரலாற்று ஆய்வு நூலில் இருந்து இவரது ஆக்க இலக்கிய வல்லமை வெளிப்பட்டுள்ளது. யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தில் பொருளியல்துறை உதவி விரிவுரையாளராக இருந்த காலத்தில் வைகறை வெளியீட்டகத்தின் ஊடாக தெளிவத்தை ஜோசப், என்.எஸ்.எம்.இராமையா, சி.வி.வேலுப்பிள்ளை ஆகியோரின் நூல்களை வெளியிட்டு மலையக இலக்கியத்திற்கு வளம் சேர்த்தவர்.

1970க்குப் பின்னர் வடபுலத்தில் மேற்கொள்ளப்பட்ட அரச பயங்கரவாதத்திற்கு எதிர்வினை தோன்றியபோது வி.ஏ.கந்தசாமி, புதுவை இரத்தினதுரை போன்ற ஆயுதப் போராட்டத்தின் மூலம் சமதர்ம அமைப்பை ஏற்படுத்த முனைந்தோர், இன விடுதலைப் போராட்டத்தில் ஈடுபட்டதுபோல பேராசான் மு.நித்தியானந்தன் அவர்களும் ஈடுபட்டு 1983 ஜூலை இனக் கலவரத்தில், வெளிக்கடை சிறைச்சாலையில் தமிழின படுகொலையின்போது உயிர் தப்பி மட்டக்களப்பு சிறைச்சாலைக்கு மாற்றப்பட்டு பின்னர், அங்கிருந்து தப்பி, தமிழ்நாட்டுக்குச் சென்று பின்னர் ஐரோப்பிய நாடுகளில் தஞ்சம்தேடி, இன்று லண்டனில் வாழ்ந்துகொண்டு இருப்பவர். இன்றும் அவரது சமூக வாஞ்சையும், இலக்கிய ஈடுபாடும் பளிச்சிடுகின்றது. ஆய்வாளராக, விமர்சகராக, நூல் வெளியீட்டாளராக தொண்டாற்றிக் கொண்டிருக்கிறார்.

அன்று மாத்தளை செல்வா என அறியப்பட்ட எச்.எச்.விக்ரமசிங்க மிக இளமையிலேயே அறுபதுகளில் ஏற்பட்ட அரசியல் மாற்றத்தில் முனைப்புக்காட்டி, அப்பொழுதே அகில இலங்கை சமாதான நீதிவானாகவும், மாத்தளை பொது வைத்தியசாலை கண்காணிப்புக்குழு உறுப்பினராகவும் கௌரவிக்கப்பட்டவர். 1972களில் தனியார் தோட்டங்கள் அரசுடமையாக்கப்பட்டு தோட்டத் தொழிலாளர்கள் எவ்வித கொடுப்பனவும் இன்றி தோட்டங்களில் இருந்து வெளியேற்றப்பட்டபோது, மலையக இளைஞர் முன்னணி உயர்மட்ட உறுப்பினராக இருந்த இவர் வடக்கு மாத்தளை தோட்டத் தொழிலாளர்களின் பாதுகாப்பு அரணாக செயல்பட்டவர்.

வடக்கு மாத்தளை வாழ் தோட்டத் தொழிலாளர்கள் இன சங்காரத்திற்கு ஆளாகியபோது அவர்களுக்கு பல வகைகளில் உதவியவர். மாத்தளையில் ஏற்பட்ட சமூக, இலக்கிய செயற்பாடுகளில் அவரது பங்களிப்பு அளப்பரியது.

இடதுசாரி அரசியலின் ஈடுபாட்டின் காரணமாக மாத்தளை பகுதியில் அவ்வரசியல் செயல்நெறியை விரிவாக்க பாடுபட்டார். 1971 கிளர்ச்சியின்போது மக்கள் விடுதலை முன்னணி உயர்மட்டத் தலைவர்களான ரோகண விஜயவீர, லயனல் போபகே உட்பட பலருக்கு சிறைத்தண்டனை வழங்கப்பட்டபோது, -பாராளுமன்ற உறுப்பினர் பிரின்ஸ் குணசேகர (1970-1977) தலைமையில் அரசியல் கைதிகளை விடுதலை செய்யவேண்டுமென்று செயல்பட்ட பேரியக்கத்தோடு இணைந்து செயல்பட்டவர். தொடர்ந்து 1989 இறுதியில் ரோகண விஜயவீர மக்கள் விடுதலை முன்னனியின் தலைவர் படுகொலைச் செய்யப்பட்ட பின்னர், அதன் பிந்திய தலைவரான சோமவன்ச அமரசிங்க அவர்களை படுகொலையில் இருந்து காப்பாற்றி புகலிடம் தேடிக்கொடுத்தமைக்காக பல வருடங்கள் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டவர். இன்று மலையக இலக்கிய புலத்தில் வெளியீடுகளைச் செய்யும் தொண்டில் ஈடுபட்டுள்ளார்.





மரியதாஸ்


மு.நித்தியானந்தன்


விக்ரமசிங்க

ஏமன்

புலம்பெயர்வோர் படகு மூழ்கி

# 49 பேர் பலி 140 பேரை காணவில்லை



சோமாலியா மற்றும் எத்தியோப்பியாவைச் சேர்ந்த புலம்பெயர்வோரை ஏற்றிக்கொண்டு வந்த படகு ஒன்று ஏமன் அருகே கடலில் மூழ்கியதில் குறைந்தது 49 பேர் உயிரிழந்ததாகவும், 140 பேரை காணவில்லை என்றும் புலம்பெயர்வோருக்கான ஐநா சர்வதேச அமைப்பு அறிவித்துள்ளது.

இது தொடர்பாக அந்த அமைப்பு வெளியிட்டுள்ள அறிவிப்பில், “சோமாலியாவின் வடக்கு கடற்கரையிலிருந்து சுமார் 260 சோமாலியர்கள் மற்றும் எத்தியோப்பியர்களை ஏற்றிக்கொண்டு ஏடன் வளைகுடா வழியாக படகு ஒன்று பயணித்தது. 320 கிலோமீட்டர் பயணித்த நிலையில் அந்த படகு, ஏமனின் தெற்கு கடற்கரையில் திங்கட்கிழமை(10) மூழ்கியது.

இதில், குறைந்தது 49 பேர் உயிரிழந்தனர். அவர்களின் உடல்கள் மீட்கப்பட்டுள்ளனர். 140 பேரை காணவில்லை. அவர்களை தேடும் பணி தொடர்ந்து நடைபெற்று வருகிறது. படகில் பயணித்தவர்களில் இதுவரை 71 பேர் மீட்கப்பட்டுள்ளனர். இறந்தவர்களில் 3க்கும் மேற்பட்டவர்கள் பெண்கள்” என தெரிவிக்கப்பட்டுள்ளது.



சிங்கப்பூர்

## குலுங்கிய விமானத்தில் காயமடைந்தோருக்கு இழப்பீடு

பிரித்தானிய தலைநகரான லண்டன் விமான நிலையத்தில் இருந்து சிங்கப்பூருக்கு கடந்த 21ஆம் திகதி விமானம் ஒன்று புறப்பட்டது. இதில் 211 பயணிகள் உள்பட 230 பேர் பயணம் செய்தனர். சிங்கப்பூர் ஏர்லைன்ஸ் நிறுவனத்துக்கு சொந்தமான அந்த விமானம் நடுவானில் குலுங்கியது. இதனையடுத்து, அந்த விமானம் தாய்லாந்து தலைநகர் பாங்காக்கில் அவசரமாக தரையிறக்கப்பட்டது.

எனினும், இந்த சம்பவத்தில் ஒரு பயணி மாரடைப்பால் உயிரிழந்தார். மேலும் 11 பேர் படுகாயம் அடைந்தனர். விபத்தில் படுகாயம் அடைந்த பயணிகளுக்கு சிகிச்சை அளிக்க முன் பணமாக சுமார் ரூ.20 இலட்சம் இழப்பீடு வழங்குவதாக சிங்கப்பூர் எயார்லைன்ஸ் நிறுவனம் அறிவித்துள்ளது.

அதேபோல் மற்ற பயணிகளுக்கு முழு கட்டண தொகையும் திருப்பி அளிக்கப்படும் எனவும் அந்த நிறுவனம் தனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது.

## போரை நிறுத்த ஐ.நா. அங்கீகாரம்

காசாவில் போரை நிறுத்துவதற்காக அமெரிக்கா முன்வைத்துள்ள மூன்று கட்ட ஒப்பந்த திட்டத்துக்கு ஐ.நா. பாதுகாப்பு சபை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

இந்த விவகாரத்தில் அனைத்து தரப்பினரையும் உள்ளடக்கிய போர் நிறுத்த திட்டத்துக்கு ஆதரவாக சபையில் தீர்மானம் நிறைவேற்றியுள்ளமை இதுவே முதன்முறையாகும்.

இந்த ஒப்பந்த திட்டத்தை இஸ்ரேலும் ஹமாஸ் அமைப்பும் ஏற்பது குறித்து சந்தேகம் நீடித்துவரும் நிலையில், ஐ.நா. பாதுகாப்பு சபை நிறைவேற்றியுள்ள இந்தத் தீர்மானம் அதை ஏற்பதற்கான அழுத்தத்தை இரு தரப்பினருக்கும் கொடுக்கும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

இது தொடர்பாக சபையில் கொண்டு வரப்பட்ட தீர்மானத்தை ஆதரித்து 15 உறுப்பு நாடுகள் வாக்களித்தன ரஷ்யா வாக்களிப்பைப் புறக்கணித்தது தீர்மானத்தை எதிர்த்து ஒரு நாடு கூட வாக்களிக்கவில்லை. இதையடுத்து, அந்தத் தீர்மானம் சபையில் நிறைவேற்றப்பட்டது.

இந்த வாக்களிப்பைத் தொடர்ந்து, அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் வெளியிட்டுள்ள ‘எக்ஸ்’ பதிவில், ‘காசாவில் போரை நிறுத்தவும் பிணைக் கைதிகள் விடுவிக்கப்படுவதற்குமான ஒப்பந்தத்தை ஏற்படுத்துமாறு ஹமாஸ் அமைப்பை வலியுறுத்தி ஐ.நா. பாதுகாப்புசபையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. காசாவில் போரை முடிவுக்குக் கொண்டுவர விரும்புவதாகக் கூறும் ஹமாஸ், அதை நிரூபிப்பதற்கான நேரம் இது’ என்று குறிப்பிட்டுள்ளார்.

இந்தத் தீர்மானத்தை வரவேற்பதாக ஹமாஸ் அமைப்பினரும் தெரிவித்துள்ளனர். இருந்தாலும், ஒப்பந்த திட்ட அம்சங்களை தங்கள் தலைமை ஏற்றுக்கொண்டுவிட்டதா என்பதை அவர்கள் இன்னும் தெளிவுபடுத்தவில்லை என்றுள்ளார்.

ஜெனீவா

## 4 வயது குழந்தைக்கு பறவைக் காய்ச்சல்

இந்தியாவில் மேற்கு வங்காளத்தில் ஏவியன் இன்புளுயன்சா ஏ (எச்9என்2) என்ற வைரசால் ஏற்படக்கூடிய அரிய வகை பறவைக் காய்ச்சல் 4 வயது ஆண் குழந்தையைப் பாதித்துள்ளதாக, உலக சுகாதார அமைப்பு தெரிவித்துள்ளது. அரிதாகக் காணப்படும் இந்த வகை வைரஸ் இந்தியாவில் கடந்த 2019 முதல் முறையாகக் கண்டறியப்பட்ட நிலையில் தற்போது 2ஆவது பாதிப்பு பதிவாகியுள்ளது.

பாதிக்கப்பட்ட குழந்தை கடந்த பெப்ரவரி மாதம் மூச்சுத்திணறல் மற்றும் கடுமையான காய்ச்சலால் மருத்துவமனையின் தீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டான். பரிசோதனையில், எச்9என்2 வைரஸ் பாதிப்பு உறுதி செய்யப்பட்டுக் கடந்த 3 மாதங்களாகத் தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டது. குழந்தையின் உடல்நிலை தேறியதையடுத்து மருத்துவமனையிலிருந்து விடுவிக்கப்பட்டான்.

குழந்தையின் வீட்டுக்கு அருகில் உள்ள கோழிப் பண்ணையிலிருந்து இந்த வைரஸ் தாக்கியிருப்பது ஆய்வில் தெரியவந்துள்ளது. குழந்தையின் குடும்பத்தினர் மற்றும் அவர்களுடன் தொடர்பில் இருந்தவர்கள் யாருக்கும் சுவாச நோயின் அறிகுறிகள் இல்லை. மேலும் இந்த வைரஸ் வேகமாக பரவும் தன்மை கொண்டது அல்ல என கூறப்படுகிறது. அரிதான இந்த வைரஸ் பாதிப்பு இந்தியாவில் 2ஆவது முறையாக பதிவாகியுள்ளது என குறிப்பிடப்பட்டுள்ளது.

திருப்பத்தூர்

## சாரைப்பாம்பை உட்கொண்டவர் கைது



சாரைப்பாம்பு ஒன்றை அடித்துக் கொன்று, அந்த பாம்பின் தோலை உரித்து துண்டு துண்டாக வெட்டி சமைத்து உட்கொண்ட சம்பவம் தொடர்பில், திருப்பத்தூர் அருகே உள்ள பெருமாபட்டு பகுதியைச் சேர்ந்தவர் இளைஞன் கைது செய்யப்பட்டுள்ளார்.

பாம்பின் தோலை உரித்து, தண்ணீரில் அலசும் காட்சிகளை காணொளியாக எடுத்து சமூக வலைத்தளங்களில் வெளியிட்டுள்ளார்.

இந்த காணொளி சமூக வலைத்தளங்களில் வைரலாக பரவியது, அவர் மீது வனத்துறை நடவடிக்கை எடுத்துள்ளது. அவரை கைது செய்து அவரிடம் விசாரணை மேற்கொண்டதில், சாரைப்பாம்பை சமைத்து உட்கொண்டதை ஒப்புக் கொண்டார். இதையடுத்து அவர் சிறையில் அடைக்கப்பட்டார்.

கொண்டலாம்பட்டி

## தாலியை கழட்டி விட்டு பெண்ணுடன் பெண் ஓட்டம்



ஐந்து வருடங்களுக்கு முன்னர் திருமணம் முடித்திருந்த பெண்ணொருவர், தாலியை கழட்டி வைத்துவிட்டு பெண்ணொருவருடன் ஒட்டமெடுத்துள்ள சம்பவமொன்று சேலம் கொண்டலாம்பட்டியில் இடம்பெற்றுள்ளது.

25 வயதான பெண்ணே, மற்றுமொருவரின் மனைவியான 39 வயதான பெண்ணுடன் மாயமாகிவிட்டார்.

இருபதுக்கு-20 உலகக் கிண்ணம்:

# கனடாவை வென்ற ாகிஸ்தான்

### கைவிடப்பட்ட இலங்கை-நேபாளப் போட்டி



சர்வதேச கிரிக்கெட் சபையின் இருபதுக்கு-20 உலகக் கிண்ணத் தொடரில், ஐக்கிய அமெரிக்காவின் நியூயோர்க்கில் செவ்வாய்க்கிழமை (11) நடைபெற்ற கனடா உடனான குழு ஏ போட்டியில் பாகிஸ்தான் வென்றது.

இப்போட்டியின் நாணயச் சுழற்சியில் வென்ற பாகிஸ்தானின் அணித்தலைவர் பாபர் அஸாம், தமதணி முதலில் களத்தடுப்பிலீடுபடும் என அறிவித்தார்.

அந்தவகையில் முதலில் துடுப்பெடுத்தாடிய கனடா, மொஹமட் ஆமிர் (2), ஷகீன் ஷா அஃப்ரிடி, ஹரிஸ் றாஃப் (2), நசீம் ஷாவிடம் விக்கெட்டுகளைப் பறிகொடுத்த நிலையில், ஆரோன் ஜோன்சனின் 52 (44), கலீம் சனாவின் ஆட்டமிழக்காத 13 (14), அணித்தலைவர் சாட் பின் ஸஃபாரின் 10 (21) ஓட்டங்களோடு 20 ஓவர்களில் 7 விக்கெட்டுகளை இழந்து 106 ஓட்டங்களைப் பெற்றது.

பதிலுக்கு 107 ஓட்டங்களை வெற்றியிலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான், மொஹமட் றிஸ்வானின் ஆட்டமிழக்காத 53 (53), பாபரின் 33 (33) ஓட்டங்களோடு 17.3 ஓவர்களில் 3 விக்கெட்டுகளை இழந்த நிலையில் வெற்றியிலக்கையடைந்தது.

இப்போட்டியின் நாயகனாக ஆமிர் தெரிவானார்.

இந்நிலையில் லௌடர்ஹில்லில் புதன்கிழமை (12) நடைபெறவிருந்த இலங்கை, நேபாளத்துக்கிடையிலான குழு டி போட்டியானது மழை காரணமாக கைவிடப்பட்டது. அந்தவகையில் இக்குழுவிலிருந்து சுப்பர் 8 சுற்றுக்கு தென்னாபிரிக்கா தகுதி பெற்றது.

இதேவேளை அன்டிகுவாவில் நடைபெற்ற நமீபியாவுடனான குழு பி போட்டியில் வென்ற அவுஸ்திரேலியா சுப்பர் 8 சுற்றுக்குத் தகுதி பெற்றது.

ஸ்கோர் விவரம்:

நாணயச் சுழற்சி: அவுஸ்திரேலியா

நமீபியா: 72/10 (17 ஓவ.)

(துடுப்பாட்டம்: ஜெர்ஹார்ட் எரஸ்மஸ் 36 (43) ஓட்டங்கள்.

பந்துவீச்சு: அடம் ஸாம்பா 4/12 [4], மார்க்கஸ் ஸ்டொய்னிஸ் 2/9 [3], ஜொஷ் ஹேசில்வூட் 2/18 [4], நாதன் எலிஸ் 1/12 [3], பற் கமின்ஸ் 1/16 [3])

அவுஸ்திரேலியா: 74/1 (5.4 ஓவ.)

(துடுப்பாட்டம்: ட்ரெவிஸ் ஹெட் ஆ.இ 34 (17), டேவிட் வோர்னர் 20 (08), மிற்செல் மார்ஷ் ஆ.இ 18 (09) ஓட்டங்கள்)

போட்டியின் நாயகன்: அடம் ஸாம்பா

இந்நிலையில் வெள்ளிக்கிழமை(14) அதிகாலை 12.30 மணிக்கு நடைபெறவுள்ள குழு பி போட்டியில் ஓமானை இங்கிலாந்து எதிர்கொள்ளவுள்ளதுடன், ட்ரினிடாட்டில் காலை 6 மணிக்கு நடைபெறவுள்ள குழு சி போட்டியில் பப்புவா நியூ கினியை ஆப்கானிஸ்தான் எதிர்கொள்ளவுள்ளது.



உலகக் கிண்ணத் தொடருக்கு

## தகுதி பெறத் தவறிய இந்தியா

சர்வதேச கால்பந்தாட்டச் சம்மேளன உலகக் கிண்ணத் தொடருக்கு தகுதி பெற இந்தியா தவறியுள்ளது.

கட்டாரில் செவ்வாய்க்கிழமை(11) நடைபெற்ற அவ்வணியுடனான ஆசிய கால்பந்தாட்டச் சம்மேளன தகுதிகாண் போட்டியில் 1-2 என்ற கோல் கணக்கில் தோல்வியடைந்தமையைத் தொடர்ந்தே உலகக் கிண்ணத்து தகுதி பெற இந்தியா தவறியுள்ளது.

இதேவேளை மலாவியில் நடைபெற்ற ஆபிரிக்க கால்பந்தாட்டச் சம்மேளன தகுதிகாண் போட்டிகளில் ஐவரிகோஸ்ட், கென்யாவுக்குமிடையிலான போட்டியானது 0-0 என்ற கோல் கணக்கில் சமநிலையில் முடிவடைந்தது.


இந்நிலையில் அங்கொலாவில் புதன்கிழமை(12) நடைபெற்ற அவ்வணியுடனான போட்டியை 1-1 என்ற கோல் கணக்கில் கமரூன் சமப்படுத்தியது.

மீளாய்வையடுத்து

## மன்செஸ்டர் யுனைட்டெட்டின் முகாமையாளராக டென் ஹக்

பருவகால முடிவையடுத்த இங்கிலாந்து பிறீமியர் லீக் கால்பந்தாட்டக் கழகமான மன்செஸ்டர் யுனைட்டெட்டின் பணிப்பாளர் சபையின் மீளாய்வைத் தொடர்ந்து அக்கழகத்தின் முகாமையாளராக எரிக் டென் ஹக் தொடரவுள்ளார்.

டென் ஹக்கின் இறுதிப் பருவகாலத்துக்குள் அவரது ஒப்பந்தம் செல்கையில் அவரது ஒப்பந்தத்தை நீடிப்பது குறித்து அவருடன் யுனைட்டெட்டின் பணிப்பாளர் சபை கலந்துரையாடுவதாகக் கூறப்படுகிறது.





சிநேகபூர்வ கால்பந்தாட்டப் போட்டியில்

## அயர்லாந்தை வீழ்த்திய போர்த்துக்கல்

போர்த்துக்கல்லில் புதன்கிழமை (12) நடைபெற்ற அவ்வணியுடனான சிநேகபூர்வ கால்பந்தாட்டப் போட்டியில் 0-3 என்ற கோல் கணக்கில் அயர்லாந்துக் குடியரசு தோற்றது. போர்த்துக்கல் சார்பாக கிறிஸ்டியானோ றொனால்டோ இரண்டு கோல்களையும், ஜோவா பீலிக்ஸ் ஒரு கோலையும் பெற்றனர்.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் வியாழக்கிழமை 13, ஜூன் 2024, இல. 08, ஹுணுப்பிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு -02 இல் வடிவமைக்கப்பட்டு, இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.